# அளவை அலம்

## தேசிய வாசிப்பு மாதம் சிறப்பு மலர்

அலம் - I

தேசிய வாசிப்பு மாதம்
ජාතික කියවීමෙ මාසය
National Reading Month

2018



பொதுநூலகம் - அளவெட்டி
ජාතික පුස්තකාලය - අලවෙඩ්ඩි
Public Library - Alaveddy







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் - 2018

# ජාතික කියවීමේ මාසය - 2018

# National Reading Month - 2018

- [illegible]
- READING TO CREATE HARMONY AMONG ETHNICITIES

பொதுநூலகம், மூதூர்

මහජන පුස්තකාලය - මුතූර්

Public Library - Mutur

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் - 2018

# ජාතික කියවීමේ මාසය - 2018

# National Reading Month - 2018

**இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு**

**ජාතික අතර අවබෝධය සඳහා කියවීම**

**READING TO CREATE HARMONY AMONG ETHNICITIES**

**பொதுநூலகம், அளவெட்டி**

**ජාතික පුස්තකාලය - අලවෙඩ්ඩි**

**Public Library - Alaveddy**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் | : | **"அளவை அலம்"**<br>தேசிய வாசிப்பு மாத<br>சிறப்பு மலர் |
| அலம் | : | 01 |
| வெளியீடு | : | பொது நூலகம்<br>வலிகாமம் வடக்கு<br>பிரதேசசபை<br>அளவெட்டி. |
| வருடம் | : | 2018 |
| இதழ் | : | 01 |
| பக்கம் | : | VIII+ 60 |
| தாள் அளவு | : | B5 |
| மலர்க்குழு | : | வாசகர் வட்டம்<br>நூலகர், நூலக<br>உத்தியோகத்தர்கள். |
| ISSN | : | 26592134 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அலத்தின் உள்ளே.........................

1. **அளவை அலம் நூல் வாயிலில்(முன்னுரை):......................... i-ii**
   - ➢ திருமதி.த.போல்சுரேஸ்
     (நூலகர், பொதுநூலகம். அளவெட்டி.)

2. **ஆசிச் செய்தி:.............................................................. iii-v**
   - ➢ சிவாச்சாரியர் சிவஸ்ரீ சோம.குமாரதாசக்குருக்கள்.
     (கும்பழாவளை பிள்ளையார் ஆலயம்)
   - ➢ அருட்திரு ஏ. ராஜ்குமார்.
     (அளவெட்டி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை)

3. **வாழ்த்துச் செய்தி:.......................................................... vi-viii**
   - ➢ கௌரவ சோமசுந்தரம் சுகிர்தன் -தவிசாளர்,வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
   - ➢ திரு. இ. பகீரதன் - செயலாளர் ,வலிகாமம் வடக்கு பிரதேச சபை
   - ➢ திரு. தி. தியாகச்சந்திரன் - பொறுப்பதிகாரி, உபஅலுவலகம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை. மல்லாகம்.

4. **பாரம்பரிய மிக்க தமிழ்க்கிராமமென சுட்டிக்காட்டக்கூடிய அளவெட்டியின் வரலாறு............................................ 01 - 04**

5. **வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் நூலகங்களில் ஒன்றான அளவெட்டி பொது நூலகத்தின் வரலாறு ............................................................ 05 - 08**

6. **அளவையின் ஆலயங்கள்:........................................ 09 - 14**
   - ➢ கும்பழாவளைப்பிள்ளையார் கோயில் தலவரலாறு.
   - ➢ அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

7. அளவையூரும் அருணோதயக் கல்லூரியும்...................... 15 - 18

8. மாணவர் ஆக்கங்கள்:........................................................ 19 - 22

- தேசிய வாசிப்பு மாதம் 2017இல் தரம் 8 மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை- நூல்கள் எனது நண்பன்.
- தேசிய வாசிப்பு மாதம் 2017இல் தரம் 12 மாணவர்களுக்கான கவிதைப்போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை- நூல்கள் எனது நண்பன்.

9. வாசகர் ஆக்கங்கள்.......................................................... 23 - 27

- தேசிய வாசிப்பு மாதம் 2017இல் வாசகர்களுக்கான போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை- நூல்கள் எனது நண்பன்.
- தேசிய வாசிப்பு மாதம் 2017இல் வாசகர்களுக்கான போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை- தளராத வாசிப்பே தாழ்வில்லாத வாழ்வை உருவாக்கும்.

10. சிறப்பு மலர் படைப்புகள்.................................................. 28 - 56

- நூலகம் சென்றிடுவீர் நூற்பயன் நுகர்ந்திடுவீர்.
- வசிப்பும் வாசிப்பும்.
- வாசிப்பின் ஊடாக தேசிய ஒற்றுமை.
- சமூகமயமாக்கலின் ஊடே கல்வி - ஓர் கண்ணோட்டம்.
- பிரதேசம் சார் வெளியீடுகளான நூல்கள், சிறப்பு மலர்களை ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியமும், அளவெட்டிப் பிரதேசம் சார்ந்த சில வெளியீடுகளும்.
- வலிகாமம் வடக்கு பிரதேசப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஓர் அறிமுகப்பதிவு.

அச்சுக்கலை தோற்றமும் வளர்ச்சியும்........................................... 57- 60

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அளவை அலம் நூல் வாயிலில்

தேசிய வாசிப்பு மாதமான ஒக்டோபர் மாதத்தில் "அளவை அலம்" எனும் முதல் மலரினை வெளியிட்டு உங்கள் கைகளில் தவழ விடுவதில் பேருவகையடைகிறேன். அளவை என்பது அளவெட்டி எனும் இக்கிராமத்தைக் குறித்தும் அலம் என்பது புதுமை, புத்தாக்கம் என்பதையும் குறித்து நிற்கின்றது. எனவே இது அளவெட்டியின் புதுமை புத்தாக்கமாகும்.

இச்சிறப்பு மலரானது தேசிய வாசிப்பு மாத காலத்தில் பொது வாசகர்களின், பாடசாலை மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் முகமாகவும், ஊர் சார்ந்த, பொது நூலகம் சார்ந்த ஆவணப்படுத்தலக்காகவும் வெளிக் கொணரப்படுகின்றது. 2017ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் பங்கு பற்றி முதலாமிடம் பெற்ற மாணவர்களின் ஆக்கங்களையும் அத்துடன் அளவெட்டி சம்பந்தமான பல்வேறு ஆக்கங்களையும் இணைத்து 2018ம் ஆண்டு தொடக்கம் இச்சிறப்பு மலரை வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

கடந்த 2017ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இந்நூலகத்தின் நூலகராகப் பொறுப்பேற்று நடாத்தி வரும் நிலையில் 2017ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாத சிறந்த செயற்பாட்டிற்கான விருது எமது நூலகத்திற்கு கிடைக்கப்பெற்றதும் மகிழ்வையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்தது.

இவ் அளவெட்டி பொது நூலகமானது பல இழப்புக்களையும் இடப்பெயர்வுகளையும், இயற்கை அனர்த்தங்களையும் கண்டு அழிவுகள் சிதைவுகளுக்கு முகம் கொடுத்தது. அதையும் தாண்டி இப்பொழுது வெற்றி நடைபோடுகிறது. முன்னேற்றமடைந்த நவீன நூலகங்கள் பல காணப்படுகின்ற போதிலும், கிராமப்புறங்களிலும், அபிவிருத்தியடையாத இடங்களிலும் நூலகத்தின் பயன்பாடு பற்றியும் எமது நூலகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும், வாசிப்பு ஆவலைத் தூண்டும் விதமாகவும் இம்மலரினை உங்கள் கைகளில் தவழ விடுகின்றோம். தகவல்கள் சகல மட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரினை வெளியிட ஆக்கங்களைத் தந்து, உதவியவர்களுக்கும் உற்சாகம் தந்து உதவிகள் புரிந்த கௌரவ தவிசாளர், மற்றும் கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், பொறுப்பதிகாரி, வாசகர் வட்டம், ஆலோசனைக்குழு, மலர்க்குழு அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் எனது சக நூலக உத்தியோகத்தர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதனை அச்சிட்டுத்தந்த துர்க்கா மல்ரி சென்ரருக்கு எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.த.போல்சுரேஸ்,**
**நூலகர்,**
**வலி வடக்கு பிரதேசசபை.**
**பொது நூலகம்,**
**அளவெட்டி.**
**14.11.2018.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி



மிக நீண்ட போருக்குப் பின்னரான இக்காலகட்டத்தில் மீண்டெழும் சமூகத்திற்கு நல்ல தலைவர்களே தேவைப்படுகிறார்கள். மனிதனின் நடத்தைகள் ஒவ்வொன்றிலும் விரவி நின்ற அன்பு, இரக்கம், கருணை முதலாம் உயரிய மனித விழுமியப் பண்புகள் அருகிப் போய் கோபம், விரக்தி, வெறுப்பு, குரோதம் போன்ற எதிர்மறை எண்ணங்கள் மேலோங்கிக் காணப்படுகின்றன. இந்நிலையில் தனிமனிதன், குடும்பம், சமூகம் என அனைத்து மட்டங்களிலும் மகிழ்வையும், மனச்சாந்தியையும் உருவாக்கி தடுமாற்றங்களைத் தகர்த்து மனவுறுதியை மேம்படுத்தி தன்னம்பிக்கையை ஊட்டி வழிப்படுத்தும், குணப்படுத்தும் செயற்பாடுகள் அவசியமாகின்றன.

கல்விவாழ்க்கை, தொழில்வாழ்க்கை, ஆன்மீகவாழ்க்கை, நடைமுறை வாழ்க்கை என எமது அன்றாட வாழ்க்கை முறைகளில் வழிகாட்டியாக, துணையாக உதவவல்ல நல்ல சூழல் அமைய வேண்டும். கல்வியாலும் அனுபவங்களாலும் மனிதனின் அறிவு மேம்படுகின்றது. அறிவால் நிரம்பிய சமூகமொன்றை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும். மனித வாழ்வில் விழுமியப் பண்புகளை வளர்ப்பதில் உதவக்கூடியனவற்றில் நூல்களுக்குப் பிரதான இடமுண்டு என்பதை பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களிலிருந்து தெரிந்து கொள்கின்றோம். நாம் நமது நேரத்தை நல்ல சிந்தனைகளுக்குப் பயன்படுத்துவதை விட தேவையில்லாத விடயங்களுக்கு அதிகம் செலவிடுகின்றோம். முதலில் கூறியபடி மனித ஆன்மாவிற்கு சிறந்த மருத்துவமளிக்கும் மருத்துவச் சிகிச்சை மையங்களாக ஒவ்வொரு ஊரிலுமுள்ள நூலகங்கள் வெறுமனே நூற்சேகரிப்புக் களஞ்சியங்களல்ல என்பது அறிஞர்களின் கருத்து.

நூலகம் சார்ந்த விழிப்புணர்வையூட்ட தேசிய அளவில் எடுக்கப்படும் வாசிப்பு மாதச்செயற்பாடு சிறந்ததெனக் கருதுகின்றேன். இளமைப்பருவத்து வாசிப்புப் பழக்கம் பல சாதனையாளர்களை, வெற்றியாளர்களை உருவாக்கியுள்ளது; உருவாக்குகின்றது; உருவாக்கும். சாதனையாளர்களின் சரித்திரங்களைத் தேடி வாசிப்பதால் மாணவர்களிடையே எதிர்காலம் பற்றிய

இலக்குகளை, கனவுகளை உருவாக்க முடியும். நாளைய வளமான பிரஜைகளே நல்ல தலைவர்களாக உருமாற முடியும்.

இவ்வாறான அறிவார்ந்த சமூகத்தை இப்பிரதேசத்தில் உருவாக்கும் பணியை நீண்ட காலமாக ஆற்றிவரும் அளவெட்டி நூலகத்தின் சஞ்சிகையாக்கும் முயற்சியை வாழ்த்தி வரவேற்கின்றேன். இப்பிரதேசத்தின் முக்கிய ஆவணப்படுத்தலாக இது அமைந்து வருங்கால வளமான சமூகத்துக்கு உதவ சங்கத்தமிழ் மூன்றும் அருளவல்ல சந்திரசேகரப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கள் பணிகளை வாழ்த்தும்,

**சிவாச்சாரியார் சிவஸ்ரீ சோம.குமாரதாஸக் குருக்கள்.**
**கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம்,**
**அளவெட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி CACM திருச்சபை குருவானவர் அவர்களின் ஆசிச்செய்தி



எல்லாம் வல்ல திரியேக கடவுள் தந்தை மைந்தன் தூயாவியர் திருப்பெயரை வாழ்த்திக் கொண்டு அளவையூர் பிரதேசசபை பொது நூலகம் வருடா வருடம் வெளியிடவுள்ள "அளவை அலம்" என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு மனிதனைப் பூரணமாக்குவது வாசித்தல். அந்த வகையில் நூலகங்கள் ஆற்றும் பணி முக்கியமானது. இன்று உலகிலேயே பெரிய நூலகங்கள் பல வியாபித்துள்ளன. இவை பெரிய கல்விமான்களுக்கே உரிய வகையில் அமைக்கப்பட்டு பெரிய கல்விமான்களையே உருவாக்கிக் கொண்டு இருக்கின்றன. வீட்டிலிருந்தவாறே வலைப்பின்னல் அமைப்பு மூலம் புத்தகங்களை தேடவும் வாசிக்கவும் முடிந்த அளவில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கிராம மட்டங்களில் நிறுவப்பட்டுள்ள சிறு நூலகங்கள் தமது சூழலில் வாழும் சாதாரண மக்களை அறிவுடைய, பண்புடைய மக்களாக மாற்றுவதில் இலைமறை காய்போல் அமைந்துள்ளன என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆகவே அவை அவசியமானவை, வளப்படுத்தப்பட வேண்டியவை.

அளவெட்டியில் அமைந்துள்ள இந்த பொது நூலகமும் அளவெட்டி வாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதகமாக அமைந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. அண்மைக் காலத்தில் இந்த நூலகத்தினால் சமூகம் சார்ந்த பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது சிறப்பானதாகும். முதியோர், சிறுவர் நிகழ்வுகள், வாசிப்பு வார நிகழ்வுகள், போட்டிகள் போன்றன நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசினால் 2017ம் ஆண்டிற்குரிய சிறந்த நூலகங்களில் ஒன்றாக இந்த அளவையூர் பொது நூலகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது. சிறப்புடன் பணியாற்றி வரும் நூலகர், உதவியாளர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

"அளவை அலம்" என்னும் இவ்வருடாந்த சஞ்சிகை வாசகர்களுக்கு ஓர் அறிவுக்களஞ்சியமாகத் திகழ வாழ்த்துகின்றேன். இந்நூலகத்தின் நூலகர், உதவியாளர் மற்றும் வாசகர்கள் யாவரையும் வாழ்த்துகிறேன்.

**அருள்திரு.ஏ.இராஜ்குமார்**

**சபைக்குரு**

**CACM திருச்சபை**

**அளவெட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ தவிசாளர் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

ஆண்டாண்டு காலமாய் அளவை மண்ணில் அறிவைப்புகட்டி இன்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் கீழ் இயங்கிவரும் அளவெட்டி பொது நூலகம் முதல் முதலாக தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "அளவை அலம்" எனும் சஞ்சிகையை வெளியிடுகின்றது. அவர்களது கன்னி முயற்சிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு மனிதன் தன் கருத்துக்களையும், எண்ணங்களையும் எழுத்தாற்றல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றான். இது ஒரு மனிதனுடைய அடிப்படை சுதந்திரமாக உள்ளது. அவ்வகையில் வாசகர்கள் ஒவ்வொருவரினதும் சுய கருத்துக்களை முன்வைப்பதற்கும், அவற்றை ஊக்குவிப்பதற்குமான சிறந்த களமாக இச்சஞ்சிகை அமையும் என்பது எனது நம்பிக்கை.

இச்சஞ்சிகையை வெளியிட ஊக்கம் கொடுத்த அளவெட்டி பொது நூலகர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மல்லாக உப அலுவலக உத்தியோகத்தர்கள், சஞ்சிகை வெளியீட்டு குழுவினருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.

பல்வேறு சிறப்புக்களுடன் இவ்வாண்டு புதிதோர் பாதையில் தேசிய வாசிப்பு மாத விருதினைபெற்று நிமிர்ந்து நிற்கும் அளவெட்டி பொது நூலகம் மேலும் பல்லாண்டு காலம் பெருவிருட்சமாக மிளிர வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதோடு எனது பரிபூரண வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியாக வழங்குகின்றேன்.

*"நூலுயர வாசிப்புயரும் வாசிப்புயர வாழ்வுயரும்"*

**கௌரவ சோமசுந்தரம் சுகிர்தன்.**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**
**காங்கேசன்துறை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செயலாளரின் வாழ்த்துச்செய்தி

பல் கலையிலும், பண்பாட்டிலும் என்றும் சிறப்புடன் விளங்கும் அளவையூரில் தனக்கென சிறப்பானதொரு இடத்தை கொண்டுள்ள அளவெட்டி பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்படும் "அளவை அலம்" எனும் சஞ்சிகைக்கு வாழ்த்து கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

அளவெட்டி பொது நூலகமானது 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பல படி நிலை வளர்ச்சிகளினூடாக இன்று பெரு வளர்ச்சியடைந்து பல செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்கின்றது. குறிப்பாக வாசிப்பு மாதத்தில் சிறுவர்களின் வாசிப்பு அறிவினை மேம்படுத்துவதற்காக பல்வேறு போட்டிகளை நடாத்தியும் பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. நூலகத்தில் வாசகர்களின் எண்ணிக்கையும் வருடா வருடம் அதிகரித்து செல்கின்றது எனவும் அறிகின்றேன். மேலும் 2017 ஆம் ஆண்டு சிறந்த நூலகத்திற்கான விருதும் இந் நூலகத்திற்க்கு கிடைத்திருப்பதையிட்டு பெரும் உவகை கொள்கின்றேன்.

இம்முறையும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்கள், வாசகர்களுக்கான பல போட்டிகளையும், கண்காட்சிகளையும் அதற்கான வேலைத்திட்டங்களையும் சிறந்த முறையில் முன்னெடுத்து தமது சேவையை சிறப்புற ஆற்றிவரும் அளவெட்டி பொது நூலகத்தின் நூலகர், உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் மேலும் இச் சஞ்சிகை சிறப்புற வெளியிடுவதற்க்கு தமது பங்களிப்புகளை வழங்கிய மலர் வெளியீட்டுக் குழுவிற்க்கும் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து இந் நூலகமும் அதன் சேவைகளும் மேன் மேலும் சிறக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.


நன்றி

**திரு.இ.பகீரதன்,**
**செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**
**காங்கேசன்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பதிகாரியின் வாழ்த்துச்செய்தி



நல்ல புத்தகங்கள் நல்ல கனவுகளை வளர்க்கும்
நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உண்டாக்கும்
நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்

(அப்துல்கலாம்)

வாசிப்பதனால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான் என்ற வகையில் மனித வாழ்வில் இன்றியமையாததாக வாசிப்புப் பழக்கம் அமைகின்றது. இந்த வகையில் அளவையூர் மக்களுக்கு அறிவை வளர்க்கும் இடமாக வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மல்லாகம் உப அலுவலக அளவெட்டி பொது நூலகம் மிளிர்கின்றது.

பல்வேறு செயற்பாடுகளின் வெளிப்பாடாக சென்ற வருடம் தேசிய வாசிப்பு மாத விருதினை பெற்று புது பொலிவுடன் மிளிரும் இவ் நூலகமானது "அளவை அலம்" என்னும் சஞ்சிகையைத் தனது முதல் வெளியீடாக வெளியிடுவதற்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பெரு மகிழ்ச சியடைகின்றேன்.

இச் சஞ்சிகையை வெளியிட பெரும் முயற்சியுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அளவெட்டி பொது நூலகருக்கும் ஏனைய உதவிகளைப்புரிந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது வாழ்த்துக்கள்.

இதே போன்று மேலும் பல சஞ்சிகைகள் வெளிவந்து சமூகத்தை வழிப்படுத்த வேண்டும் என்று மேன் மேலும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

**திரு.தி.தியாகச்சந்திரன்**
**பொறுப்பதிகாரி ,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**
**உப அலுவலகம் ,**
**மல்லாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரம்பரியம் மிக்க தமிழ்க் கிராமமென சுட்டிக்காட்டக்கூடிய அளவெட்டியின் வரலாறு

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் பெரிய கிராமம் அளவெட்டி. நிலப்பரப்பால் மட்டுமல்ல மூலவளங்கள் அத்தனையாலும் பெரிய ஊர். தன்னிறைவு பெற்ற கிராமம். வயல் சூழ்ந்த செழுமை. செம்பாட்டு மண்ணின் வளம். சீரும் திருவும் நிறைந்த புனிதமான திருவூர். ஆதலால் அளவெட்டி பேரூர் என போற்றப்படுகின்றது. நீர்வளம், நிலவளம், மனிதவளம், கல்விவளம், கலைவளம், தொழில்வளம் முதலான அத்தனை வளங்களும் நிறைந்த பேருர் இது.. "தள்ளா வினையுளாம் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு" என வள்ளுவர் பெருமான் நாட்டிற்குச் சொன்ன எல்லாப் பெருமையும் இப் பேரூருக்கு உண்டு.

பெரிய அளவுடன் நின்று விடாமல் கண்ணார் கல்வியின் கருவூலம், ஆன்மீகத்தின் ஆள்புலம், கவின் கலைகளின் காப்பகம், தமிழ் இலக்கியத் தடாகம் முதலாம் நிலைகளையும் எட்டிப் புகழுடன் திகழ்வது அளவெட்டி. "மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் உழவர் முதற் கொண்டு அனைவரும் குறைவற்ற செல்வத்தை குறையற்ற வழிகளில் ஈட்டி அதனைத் தமக்காக மட்டுமல்லாமல் பிறருக்காகவும் பயன்படுத்தும் ஊர்.

உண்டி கொடுத்து உயிர் காக்கும் உழவர்கள், இயல், இசை, நாடக முத்தமிழ் வித்தகர்கள், கல்விப் பேரறிஞர்கள், அருளாளர்கள், ஞானிகள், சமய சான்றோர்கள், சட்டத்தரணிகள், நீதவான்கள், சிற்ப, ஓவிய தொழில்நுட்ப வல்லுநர்கள், அரசியல் பிரமுகர்கள், பாரம்பரிய நவீன வைத்திய நிபுணர்கள் முதலாக ஒரு நாட்டிற்கு இருக்க வேண்டிய அத்தனை துறைசார் தக்கார்களும் அன்று முதல் இன்று வரை வாழும் பெருமைமிக்க பேரூர் அளவெட்டி.

'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என நம்மூர் கவிஞன் மகாகவி உருத்திரமூர்த்தி உரைத்தது போல் பழமையையும் செழுமையையும் பண்பாட்டுச் செழிப்பையும் கொண்டது அளவெட்டி. அளவெட்டி கிராமத்தில் ஆத்மீக காற்று வீசுகின்றது. கோயில் மணியோசை கேட்டு எழும் பண்பாட்டு பாரம்பரியம் நிறைந்த கிராமம். அழகான பெரும் கோவில்களும் சிறிய பல கோவில்களும் வீதிகளில் எல்லைகளில் மூலைமுடுக்கெல்லாம் தெய்வ சந்நிதானங்களும் நிறைந்தவூர். "பாடுபட்டு உழைப்பவர்க்கே இப்பாரிடம் சொந்தமையா" என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாவரிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ப இவ்வூர் மக்கள் அன்றாடம் பாடுபட்டு உழைக்கும் பண்பாட்டில் வளர்ந்தவர்கள். தங்கள் கிராமத்தின் பிள்ளைகளின் கல்விக்காக பல பாடசாலைகளைத் தோற்றுவித்து நல்லறுவடை கண்டவர்கள். நாடு போற்றும் ஆத்மீக வள்ளல்களையும் சட்ட வல்லுநர்களையும் உருவாக்கி பெருமை பெற்றவர்கள். இவ்வாறு இத்திருவூரின் பெருமையை அடுக்கிக் கொண்டே போகலாம்.

'அளவெட்டியில் வாழும் மக்கள் தெய்வீகத்தைச் சுவாசிக்கிறார்கள்' என்று கூறியவர் சுப்பிரமுனிய சுவாமிகள். அமெரிக்காவில் சைவ ஆதீனம் உருவாகுவதற்கும் ஹவாய் மாநிலத்தில் மிகப்பெரிய சிவன்கோயில் கட்டப்பட்டு உள்ளதற்கும் அளவெட்டியில் உருவான ஆத்மீக சம்பாசனையே வித்திட்டதை உலகம் அறியும். அளவெட்டியில் பிறந்து அறவழியில் மக்களை ஆற்றுப்படுத்திய ஆசிரியர் பிரான் மயில்வாகனம் அவர்களை நன்றியோடு சமூகம் இன்றும் போற்றுவதைக் காணலாம்.

எம் ஊரின் பெருமையை உலகில் பரவச் செய்த உத்தமர்கள் இக்கிராமத்தின் மண்ணின் வாசனை மட்டுமல்ல தூசுகளும் ஒன்றாகவே ஒட்டிக் கொண்ட ஓலைக் குடிசைகளுக்குள்ளும் விவசாய குடும்பங்களிலும் இருந்தே பெரும்பாலும் வெளிப்பட்டனர். கலைகளில் சிறந்த அளவெட்டி மகாவித்துவான்களை மகாகவியைத் தந்து நிலைத்த பெருமை பெற்றது. முத்தையா முதல் விகடகவி திருநாவுக்கரசு வரை பிறிதொரு கல்விப் பாரம்பரியம் இத்திருவூரில் வளம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. சைவத் தவமுனி கைலாசபதி முதல் எத்தனை மேதைகள்! இலக்கண பண்டிதர் நாகலிங்கம் ஐயா எம்மத்தியில் வாழ்ந்து அளவெட்டியின் அறிவுலகை ஆய்ந்து வெளிப்போந்தார்.

கனகசபைப் புலவர், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த சதாசிவஐயர், மௌனத்தவமுனிவர் சிந்தனைச்செல்வர் பொ.கைலாசபதி, ஆசிரியர் திரு.செ.மயில்வாகனம், கல்விமான்களான சிதம்பரப்பிள்ளை, சிவபாதசுந்தரம், சற்குணசிங்கம், யாழ் அரச அதிபராயிருந்த ம.ஸ்ரீகாந்தா, அருட்கவி விநாசித்தம்பி, நவயுகக் கவிஞர் மகாகவி எனும் உருத்திரமூர்த்தி, லயஞான குபேரபூபதி வி.தட்சணாமூர்த்தி, மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, நாதஸ்வர திலகம் என்.கே.பத்மநாதன், தவில் வித்துவான் கணேசு, கதாப்பிரசங்கக் கலைஞர் தா.பொன்னம்பலம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியரும் எழுத்தாளருமான 'ஆதவன்' சி.பொன்னம்பலம், அரசியலாளர் வ.பொன்னம்பலம், ஆகியோர் அளவெட்டியின் புகழை ஓங்கச் செய்தவர்களில் சிலர் என்ற வகையில் இவ்வூருக்கும் பெருமையே.

இசையால் உலகையாளும் கலைப்பாரம்பரியம் இன்றும் இவ்வூரில் தொடர்கின்றது. சங்கீத பூசணம் திரு.வி.கே.நடராசா ஆசானும் அவரது ஆற்றுப்படுத்தலில் வளர்ந்த இசைக் கலைஞர்களும் அளவெட்டி தந்த அற்புத மேதைகளாக விளங்குகின்றனர். அன்றும் இன்றும் புகழ் பூத்த அதிபர்களை அளவெட்டி கல்வி உலகிற்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் மகாஜனா கல்லூரி அதிபர் திருமதி.சி.அனந்தசயனன், யூனியன் கல்லூரி அதிபர் திரு.சு.புண்ணியசீலன், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு.ச.சிவநேசன், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு.கு.விமலன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம், அருணோதயக் கல்லூரி அதிபர் திரு.நா.கேதீஸ்வரன் போன்ற அதிபர்கள் பலர் அளவெட்டியின் சொத்துக்கள் என்பது இக்கிராமத்திற்கு பெருமை ஆகும்.

இங்குள்ள மக்கள் பல்வேறு தொழில்சார் துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்கள். இங்குள்ள விவசாய நடைமுறைகள் அனைவரையும் கவரக்கூடியது. இக்கிராமம் பலவகை மண்ணமைப்பையும் நிலத்தடி நீர் வளத்தையும் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அளவெட்டியின் விவசாயப் பெருமக்கள் வயல் நிலம், மேட்டு நிலம் ஆகிய இரு பகுதியிலும் வருடம் பூராகவும் பல்லினப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தி வருகின்றனர். அளவெட்டியின் வடக்கு எல்லையான அம்பனைப் பகுதியில் இருந்து அளவெட்டிக் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் வழுக்கையாறு விவசாயத்திற்கு மேலும் மெரு கூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

கோவில் பெருமையைக் கூறின் மாருதப்புரவீகவல்லியால் கட்டப்பட்ட மூன்று பிள்ளையார் கோவில்களைக் கொண்டது அளவெட்டி. அவை அளவோலைப் பிள்ளையார் கோவில், கும்பழாவளைப் பிள்ளையார் கோவில், பெருமாக் கடவை பிள்ளையார் கோவில் ஆகியவையாகும். இவற்றை விட குருக்கள் கிணற்றடி பிள்ளையார், தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலயம் ஆகிய பிற கோவில்களும் உள்ளன. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஔவைப்பாட்டியின் வாக்கை நிதர்சனமாக்கிய பெருமையும் அளவெட்டி கோவில்களுக்கு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பூர்வ குடிகள் என்பதும் இந்நாடு முழுவதிலும் பரந்து வாழ்ந்த அவர்கள் சிவபெருமானை முழுமுதற்கடவுளாக கொண்ட சைவசமயத்திற்கு உரியவர்கள் என்பதும் உள்நோக்கம் கொண்ட சிலரால் மறுக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வரும் இக்காலத்திலே இதோ ஒரு பாரம்பரியத் தமிழ்க் கிராமம் எனச் சுட்டிக்காட்டக்கூடியதாக அளவெட்டி மண்ணுக்கு என்று ஒரு இயல்பு அங்கு வாழும் மக்களாலேயே ஏற்படுத்தப்படுகிறது. அளவெட்டி தனது மைந்தர்களால் பாரெங்கும் புகழேந்திய வண்ணம் பூரிப்புடன் திகழ்கின்றது.

**தொகுப்பு: திருமதி தனேஸ்வரி போல்சுரேஸ்**
**நூலகர்**
**பொது நூலகம்**
**அளவெட்டி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உத்தியோகத்தர்கள் வலி வடக்கு பிரதேச சபை உப அலுவலகம் மல்லாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் நூலகங்களில் ஒன்றான அளவெட்டி பொது நூலகத்தின் வரலாறு

யாழ்ப்பாணத்தில் உள்ள கிராம, பட்டின நகர சபைகள் யாவும் (53ம்) அதன் உப அலுவலகங்களாக மாறியது. பின்னர் 1990ஆம் ஆண்டு திரும்பவும் ஒவ்வோர் பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒரு பிரதேசசபை உருவாகியது. எமது பிரதேச சபையின் கீழ் இயங்கும் அளவெட்டி நூலகத்தின் வரலாற்றை ஆராய்வோம்.

அளவெட்டி பொதுசன நூலகம் மல்லாகம் கிராமசபையானது அளவெட்டி, மல்லாகம் ஆகிய இரு கிராமங்களையும் உள்ளடக்கியது. இச்சபையின் நீண்ட கால வரலாற்றில் 1969 ம் ஆண்டு சபையின் தலைவராக இருந்த அமரர் திரு.வ.பொன்னம்பலம் அவர்கள் எமது சபையின் கீழ் ஒரு நூலகம் அமைக்க வேண்டும் என சபையின் கூட்டத்தில் முன்மொழிந்து அதனை சபை ஏகமனதாக ஏற்று அனுமதியையும் பெற்றுக் கொண்டார். அடுத்ததாக நூலகம் கட்ட ஒரு இடம் தேவைப்பட்டது.

அளவெட்டி டச்சு வீதியில் முன்னொரு காலத்தில் கீழிச்சந்தை என்னும் பெயருடன் ஓர் சந்தை நடந்து வந்தது. பிற்காலத்தில் அங்கு சந்தை இடம் பெறாது வெறுமனே இருந்தது. அப்போது இருந்த அரசாங்கம் இந்த அரச காணியான கிராம சபைக்கு சொந்தமான காணியில் ஒரு சமாஜ மண்டபம் கட்ட அரசு நன்கொடையாக ரூபா 6 ஆயிரம் தருவதாக தலைவர்கள் கூட்டத்திலும் சொல்லப்பட்டது. அதை சாதகமாக பாவித்து தலைவர் பொன்னம்பலம் அந்த நிதியை அரசிடம் பெற்றுக் கொண்டார்.

அந்த பணத்தை ஆரம்ப நிதியாக வைத்து ஊர் பிரமுகர்களான திரு. தோமாறுப்பிள்ளை அவர்கள் ரூபா ஆயிரமும் காலம் சென்ற திரு. சு.வேலுச்சாமி அவர்கள் ரூபா இரண்டாயிரம் பணமாக அன்பளிப்புச் செய்தனர். அத்துடன் ஊர் மக்கள் பலரும் பொருளாக அன்பளிப்புச் செய்தனர். அளவெட்டி மல்லாகம் பல.நோ.கூ.சங்கம் ஒப்பந்தம் எடுத்து தாங்களும் இலாபம் இல்லாமலும் நிதியும் உதவி நூலகம் கட்டி முடிக்கப்பட்டது. அப்போது இருந்த பாராளுமன்ற சபாநாயகர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கிராம சபையில் இருந்த சிறுதொகை நூல்களுடன் முதலில் கிராம சபையில் தற்காலிக லிகிதராக இருந்த வி.அனாதரட்சன் அவர்களுக்கு பயிற்றப்படாத நூலகப் பொறுப்பாளராக நியமனம் வழங்கப்பட்டது. நூலகத்தை மையமாக வைத்து எமது கிராம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் எல்லோரும் மாதம் ஒருமுறை சமாஜ நூலகத்தில் கூடி கலந்துரையாடல்களை நடாத்தியும், நூலகத்தின் செயற்பாட்டை 1971 இல் நூலகம் ஆரம்பமாயிற்று. நூல்களை இரவலாக வழங்கியும் சிறுவர், மாணவர், பொதுமக்கள், விவசாயிகள், தொழிலாளிகள், பெண்கள் எல்லோரும் பயன்பெறும் வகையில் பிற்பகல் 01 மணியளவில் இருந்து பிற்பகல் 08 மணி வரை நூலகத்தை சிறப்பாக இயங்கச் செய்தனர். நூலகம் மெல்ல மெல்ல புதிய புத்தகங்களை கொள்வனவு செய்து சிறப்புடன் இயங்கி வந்தது.

1975 ம் ஆண்டு நூலகப் பொறுப்பாளராக இருந்தவர் வேறு வேலைக்குச் சென்று விட்டார். இந்த இடத்திற்கு பயிற்றப்பட்ட நூலகப் பொறுப்பாளராக க.சண்முகநாதன் நியமிக்கப்பட்டார். நூலகம் வளர்ந்து சிறப்பாக வரும் காலத்தில் 1987ம் ஆண்டு வலி வடக்கில் இராணுவ நடவடிக்கையால் நூலகமும், இந்த பகுதியும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருந்ததுடன் நூலகமும் சேதத்திற்குள்ளானது. அந்த கால கட்டத்தில் எமது பிரதேச செயலகத்தில் விசேட ஆணையாளராக இருந்த திரு.நா.வேதநாயகன் அவர்களும் பின் திருமதி. பத்தினியம்மா. திலகநாயகம் அவர்களும் நூலகத்தை புனரமைக்க பெரும் துணை புரிந்தனர். இந்த கால கட்டத்தில் பிரதேச சபையின் தலைவராக, திரு.சிறிபாஸ்கரனும் தொடர்ந்து முயற்சி செய்து நூலகக் கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்து மிகவும் நல்ல முறையில் நூலகம் இயங்கியது.

தொடர்ந்து 2003ம் ஆண்டு நூலகர் சண்முகநாதன் வேலணை பிரதேச சபைக்கு இடமாற்றலாகி சென்ற போது நூலகராக திரு.பா.விஜயகுமார் நியமனம் பெற்றார். தொடர்ந்து பல நூலகர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்று தற்சமயம் திருமதி.த.போல்சுரேஸ் நூலகராக கடமையாற்றுகின்றார். இங்கே சிறுவர் பகுதி, உடன் உதவும் பகுதி, இரவல் கொடுக்கும் பகுதி, வாசகர் பகுதி என்பன உண்டு. பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அமைதியாக இருந்து தமது பாடங்களை படிப்பதற்கு தேவையான சகல விதமான புத்தகங்களும் உண்டு. இங்கே நூல்கள் யாவும் பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்து செவ்வனே நூலக சேவை இடம் பெற்று வருகின்றது. நூலக வாரம், உலக புத்தக தினம், சிறுவர் தினம், முதியோர் தினம், மற்றும் மாதம்தோறும் போட்டிகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் என்பனவும் தேசிய வாசிப்பு மாத போட்டிகள் நிகழ்வுகள் என்பனவும் சிறப்பாக நடாத்தப்பட்டு பெறுமதி மிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகிறது முதன் முதலாக அளவெட்டி பொது நூலகத்திற்கு 2017ம் ஆண்டில் சிறப்பாக செயற்பட்டமைக்கான விருதிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

1971ம் ஆண்டில் இருந்து பொது நூலகமாக ஆரம்பிக்கபட்ட நாளிலிருந்து நூலகர்களாக கடமையாற்றியோர் விபரம்

- 1975 – 2000 நூலகர் திரு க. சண்முகநாதன்
- 2000 – 2002 நூலகர் திரு பார்த்தசாரதி விஜயகுமார்
- 2002 – 2004 நூலகர் திருமதி கருணாநிதி இரத்தினேஸவரி
- 2004 – 2006 நூலகர் திருமதி இரவீந்திரன் விஜயலக்ஷ்மி
- 2006 – 2011 நூலகர் திருமதி ஸ்ரீரஜனி அமரசிங்கம்
- 2011 – 2017 நூலகர் திருமதி மீரா பார்த்தீபன்
- 2017 – இன்று வரை நூலகர் திருமதி தனேஸ்வரி போல்சுரேஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பழாவளைப்பிள்ளையார் கோயில்

## தலவரலாறு

இந்து மாசமுத்திரத்தின் மத்தியிலுள்ள இலங்கை மணித்திருநாட்டின் வடபாலிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சுயநிறைவுப் பொருளாதாரத்தில் வாழ்ந்து வரும் மக்கள் நிறைந்த கிராமமே அளவெட்டி ஆகும். இக்கிராமத்தில் அமைந்துள்ள கோயிலே கும்பழாவளைப்பிள்ளையார் கோயிலாகும்.

மாருதப்புரவீகவல்லி என்னும் பெயருடைய சோழ அரசிளங்குமாரி குதிரை முகம் உடையவளாகவும் குஷ்டரோக நோய்வாய்ப்பட்டவளாகவும் இருந்தமையால் அக்குதிரை முகமும் குஷ்டரோகமும் நீங்குவதற்கு பற்பல சிகிச்சைகள் செய்தும் பல தெய்வ வழிபாடுகள் ஆற்றியும் நோய் நீங்காமையால் ஞானி ஒருவரின் அருள்வாக்கின்படி இலங்கையின் வடபகுதியை அடைந்தாள். யாழ் குடாநாட்டின் வடபால் அமைந்துள்ள கீரிமலை என்னும் புனித தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து மாவிட்டபுரத்தில கந்தசாமி விக்கிரகத்தை ஸ்தாபித்து வழிபட்டாள். அவளது நோயும் குதிரை முகமும் நீங்கியது. குறித்த குதிரை முகமானது பிறர் பார்வைக்கு நீங்கினாலும் அவளது சொந்த நினைவுக்கும் பார்வைக்கும் நீங்கப் பெறவில்லை. அதன் காரணம் யாது என ஆராய்ந்த போது கந்தசாமி வழிபாட்டுக்கு முன் விக்னேஸ்வர ஆராதனை செய்யாமையே எனத் தவப் பெரியோர் கூறக் கேட்டு அரசிளங்குமாரி தன் பிழையை நினைந்து மனம் வருந்தினாள். விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வரரைத் தியானித்து "மெய்ப்பொருள் பாலிக்கும் மெய்ப்பொருளாயுள்ள பெருமாளே அறியாமல் அடியேன் செய்த பிழையை மன்னித்து என்மேல் இரங்கி அருளுக. நான் செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக உமது பிரதிரூபத்தினை ஏழு ஸ்தானங்களில் பிரதிஸ்டை செய்து வழிபடுவேன்." என மனமிரங்கி வேண்டினாள். கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் கோயில் முதலாகத் தென்திசை நோக்கி ஒரே நிரையில் ஏழு ஸ்தலங்களில் விக்னேஸ்வரரைப் பிரதிஸ்டை செய்வித்தாள். கொல்லங்கலட்டி, வரத்தலம், அழகொல்லை, கும்பழாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பனவே அத்தலங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலங்களுள் மத்தியஸ்தலமாக உள்ள கும்பழாவளையில் விக்னேஸ்வர அர்ச்சனை முடிந்த போது அவ்வரசிளங்குமாரியின் குதிரை முகச்சாயை அவளது சொந்தப் பார்வைக்கும் முற்றாக நீங்கியது. இக் கும்பழாவளையின் முன்றில் சோலை மாவிழிதிட்டி (அதாவது மா-இழி-திட்டி) எனவும் இத்திருத்தலத்தின் தென்கிழக்கு மூலையில் இருக்கும் வயல் (இது முன்பு குளமாகக் காணப்பட்டது) குமாரத்திகுளம் என அழைக்கப்பட்டமை இவ்வாலயத்தின் வரலாற்றுச்சான்றாக அமைகின்றது. இவ்வாலயத்தின் திருவூஞ்சற்பாடல்களில் ஒன்பதாவது பாடலில் இவ்வரலாறு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கும்பலாக நின்று ஆவினங்கள் மேய்ந்தபடியால் கும்பல்-ஆவளை எனப் பெயர் உண்டானதாகவும் பல்வேறு ஐதீகங்கள் உண்டு. இவ்வாலயமானது மாருதப்புரவீகவல்லியின் வருகைக்கு முன்னரே இருந்தது என்பது ஐதீகம். மாடு மேய்க்கும் ஒருவர் அவரது மாடுகள் மேயும் தருணத்தில் இக்கோயில் அமைந்துள்ள இடத்துக்கு அருகில் இருந்த மரத்தின் கீழ் படுத்து உறங்கியதாகவும் உறக்கம் கலைந்து எழுந்தபோது எதிரே இருந்த மண்மேட்டில் ஒரு சோதி தெரிந்ததாகவும் சோதியைச் சுற்றி எருக்கலஞ்செடிகள் இருந்ததாகவும் அதன் மத்தியில் கல் காணப்பட்டதாகவும் அதனை அவர் ஊர் மக்களுக்குக் கூற அவர்களும் அதனை பார்த்து அதிசயித்து அக்கல்லை ஒவ்வொருவரும் சிவன் என்றும் சக்தி என்றும் வைரவர் என்றும் முருகன் என்றும் நினைத்து வழிபட்டு வந்தனர் என்றும் பின்னர் ஒருநாள் இறைபக்தி மிகுந்த ஒரு பெண்ணின் கனவில் விநாயகப்பெருமான் தோன்றி அந்த மண்மேட்டில் தான்தான் இருப்பதாகவும் தன்னை பிள்ளையார், கணபதி, விநாயகர் என எண்ணி வழிபடுமாறு கூறியதாகவும் ஒரு கொம்பை ஏந்தியபடி காட்சி தந்ததால் கொம்பு-ஆவளை கொம்பளாவளை என வந்ததாகவும் பின் அது மருவி கும்பழாவளை என வந்ததாகவும் கூறுவர்.

யாழ்ப்பாண அரசை போர்த்துகேயரும் ஒல்லாந்தரும் கைப்பற்றி ஆண்டபோது எல்லாச் சைவ ஆலயங்களும் இடிக்கப்பட்டன. அப்போது இத்தலமும் இடிக்கப்பட்டது. அப்போது இக்கோயிலின் மூலஸ்தான விக்கிரகமானது கோயிலின் அருகில் வாழ்ந்த கணபதி ஆச்சாரியாரால் மரப்பொந்து ஒன்றில் பாதுகாக்கப்பட்டு பூசிக்கப்பட்டது, என்றும் பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் மதச் சுதந்திரம் வழங்கப்பட்டதால் 1811ஆம் ஆண்டளவில் கர்ப்பக்கிரகமும் மகாமண்டபமும் கட்டப்பட்டன. இதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமாக ஒல்லாந்தர் காலத் தோம்பில் இவ்வாலயத் தகவல்கள் இருப்பதைக் குறிப்பிடலாம். 1847ஆம் ஆண்டு எழுதப்பட்ட தோம்பில் இவ்வாலயத்தின் மூலஸ்தானம் கற்களால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்டதெனவும் இதன் பரிபாலகர்களாக இராசதுரை முதலியார், பழனிப்பிள்ளை, இராமலிங்கஜயர், சுப்பையர் ஆகியோர் விளங்கினர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1893இல் கிராம மக்களின் நிதிப்பங்களிப்பின் மூலம் அர்த்தமண்டபம் வரை கட்டி முடிக்கப்பட்டது. 1903இல் மகாமண்டபம் ஆரம்பிக்கப்பட்டு 1911இல் பூர்த்தியாக்கப்பட்டது. மூலஸ்தானத்திலுள்ள தூபி மிக நுட்பமான சித்திர வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டு இப்போதும் காட்சி தருகின்றது. இத்திருப்பணிக்கான சாசனம் ஆலயமண்டப முற்சுவரில் உண்டு. 1948ஆம் ஆண்டு தர்மகர்த்தாக்கள் சபை நிறுவப்பட்டு அச்சபையின் கீழ் ஆலயம் பல வளர்ச்சியைக் கண்டது. 1949இல் புனருத்தாரண கும்பாபிசேகம் நடைபெற்றது. 1953இல் 3 தளங்களைக்கொண்ட கோபுரமும் மணிக்கட்டுக்கோபுரமும் கட்டுவதற்கு அத்திவாரமிடப்பட்டு அவை 1962ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டு மகா கும்பாபிசேகம் செய்யப்பட்டது. 1966இல் முகப்பு மண்டபம் கட்டப்பட்டது. 1970இல் 3 தேர்கள் விடக்கூடிய ஓர் தேர்முட்டி அமைக்கப்பட்டது. 1979இல் தேர்முட்டி ஊர்மக்களின் நிதி உதவியோடு தேர்கொட்டகையாக அமைக்கப்பெற்றது. 1984இல் ஆலயத்திற்கு தென்பகுதியில் வீதிக்கு அண்மித்ததாக தீர்த்தகுளம் ஒன்றும் நீராடல் மண்டபம், சுவாமிஇருக்கும் மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டன. 1992இற்கு பின்னர் ஏற்பட்ட யுத்த அனர்த்த இடப்பெயர்வினால் சேதமுற்று பின் ஆலய திருப்பணிச்சபையால் பல திருத்த வேலைகள் நிறைவேற்றப்பட்டு 2002ஆம் அண்டு கும்பாபிசேகம் நடைபெற்றது. இக்கோயிலில் நித்திய நைமித்திய பூசைகளும் முக்கிய விழாக்களும், மகோற்சவமும் சிறப்புற நிகழ்கின்றன. விழாக்காலங்களில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் அளவெட்டி, தெல்லிப்பழை, மல்லாகம், கந்தரோடை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, சிறுவிளான், பெரிவிளான் ஆகியவற்றில் இருந்து வருகை தருகிறார்கள். தற்போது அளவெட்டியில் பாலர் கல்விகளையும், பல அறப் பணிகளையும் இவ் ஆலயம் மேற் கொண்டு வருகிறது.

தொகுப்பு :திரு.சண்முகலிங்கம் சஜீலன்.
(பன்னாலை தெல்லிப்பழை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவையூரில் அமைந்த அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை

## முன்னுரை

தலைமுறை தலைமறையாக வரலாற்றை ஆண்டு நடத்துபவராகிய திரியேக கடவுளுக்கு புகழ் உண்டாகட்டும். 1816 ம் ஆண்டு அமெரிக்கன் மிசனரிமார் யாழ்.குடாநாட்டில் காலடியெடுத்து வைத்தது முதல் யாழ்.குடாநாட்டு மக்கள் வாழ்விலும் வரலாற்றிலும் ஓர் புதிய யுகம் மலர்ந்தது எனலாம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி யாழ். குடாநாட்டுக்கும் கொண்டு வரப்பட்டது. திருச்சபைகளும் தேவாலயங்களும் அமைக்கப்பட்டன, கல்வி அறிவு புகட்டப்பட்டது, கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டன. மருத்துவப்பணி மேற்கொள்ளப்பட்டது, மருத்துவமனைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அந்த வகையில் மிசனரிமாரால் அளவெட்டிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பயனாக உருவாக்கப்பட்ட திருச்சபை நூற்றி அறுபத்தைந்து ஆண்டு கால வரலாற்றையும் வழிபாட்டிற்கென அளவெட்டி மேற்கில் அமைக்கப்பட்ட தேவாலயம் தொண்ணூறு ஆண்டு கால வரலாற்றையும் கொண்டது. இந்த வரலாற்றுத் தொடரினை இச்சிறிய ஆக்கம் மூலம் அறியத் தருவதில் மகிழ்வடைகின்றோம்.

## அமெரிக்கன் மிசன் தோற்றம்

1806 ஆண்டு யூலை மாதத்தின் ஒரு சனிக்கிழமை நாளில், அமெரிக்காவின் புகழ்பெற்ற வில்லியமஸ் கல்லூரியைச் சேர்ந்த சாமுவேல் மில்ஸ், ஜேம்ஸ் றிச்சேட்ஸ், றொபின்ஸ், லூமிஸ், கிறின் ஆகிய ஐந்து மாணவர்கள் அமெரிக்காவின் புகழ்பெற்ற மசாசூசெட்ஸ் மாநிலத்தில் திடீரென ஏற்பட்ட புயல் மழையின் போது வைக்கோலினாலான குடிசையில் ஒதுங்கி ஜெபித்தனர். அப்போது ஆசியாக்கண்டத்திற்குள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டுமென்ற ஓர் உள்ளுணர்வைப் பெற்றுக் கொண்டனர். அதனைச் செயல்படுத்த ஒரு சங்கத்தை உருவாக்க வேண்டுமென தீர்மானித்தனர். இதன் பயனாக 1810 ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி வெளிநாட்டுப்பணிகளுக்கான அமெரிக்க ஆணைக்குழு (American board of commissioners for foreign missions – ABCFM) என்ற சங்கம் ஏற்படுத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையில் அமெரிக்கன் சிலோன் மிசன்

1812 ம் ஆண்டு இச்சங்கத்தைச் சேர்ந்த முதல் மிசனரிகளாகிய யட்சன் (Judson) சாமுவேல் நியூவெல் (Samuel Newel) என்னும் குருமாரும், அவர்களது மனைவிமாரும் "கரவன்" எனும் பாய்க்கப்பலில் பெப்ரவரி மாதம் 19 ம் திகதியும், நொற் (Nott) என்னும் குருவும் அவரது தாயாரும், கேல் (Hall) லூற்றர்றைஸ் (Lutter Rise) என்னும் குருமாரும் "ஆமொனி" என்னும் பாய்க்கப்பலில் அதே மாதம் 24 ம் திகதியும் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டனர். இவர்களில் சாமுவேல் நியுவெல் என்ற குருவானவரும் அவரது மனைவியும் எதிர்பாராத விதமாக கடவுளின் அதிசய வழிநடத்தலால் 1813ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர். நற்செய்திப் பணிக்கு யாழ்ப்பாணம் ஏற்ற களம் என்று அவர்கள் கேள்விப்பட்டு 1813ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ம் திகதி யாழ்ப்பாணம் வந்து சில காலம் தங்கியிருந்து நிலமைகளை அவதானித்தனர்.

### யாழ்.குடா நாட்டில் அமெரிக்கன் சிலோன்மிசன்

சாமுவேல் நியூவெல் குருவானவர் யாழ்ப்பாணம் நற்செய்திப் பணிக்கு ஏற்ற களம் எனவும் அங்கு மிசனரிமாரை அனுப்புமாறும் குறித்த ABCFM சங்கத்தினருக்கு பரிந்துரை செய்தார். அதன் பயனாக ஜேம்ஸ் றிச்சட்ஸ் குருவும் அவரது மனைவியும் மெக்ஸ் குருவும் அவரது மனைவியும் டானியல் பூவர் குருவும் அவரது மனைவியும் பாட்வெல் குருவும் அவரது மனைவியும் எட்வேட் வோறன் குரு ஆகியோர் அடங்கிய முதலாவது மிசனரி குழுவினர் 1815ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி "திரயத்" என்னும் பாய்க்கப்பலில் இலங்கை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தனர். 1816ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி கொழும்பை வந்தடைந்தனர். அங்கிருந்து சிலர் தரைமார்க்கமாகவும் (பல்லக்கில்) சிலர் கடல் மார்க்கமாகவும் (பாய்க்கப்பல்) யாழ்ப்பாணம் வந்து தெல்லிப்பளையிலும் வட்டுக்கோட்டையிலும் குடியேறித் தம் பணிகளை அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் திகதி (1816 ஒக்டோபர் 15) ஆரம்பித்தனர். தமது பணிக்கு உதவியாக தமிழர்களின் பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் தமிழ்மொழியையும் கற்றுக் கொண்டனர். டானியல் பூவர், லோறன் ஆகியோர் அளவெட்டியைச் சேர்ந்த மெஸ்.நிக்கிலாசுப்பிள்ளை என்பவரிடத்தும் ஏனைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமார் கொழும்பைச் சேர்ந்த மெஸ். காபிரியேல்பிள்ளை என்பவரிடத்தும் தமிழைக் கற்றுக் கொண்டனர். இவ்விருவரும் 1819ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஞானஸ்தானம் பெற்ற கிறிஸ்தவர்களாகினர். இவர்களே அமெரிக்கன் சிலோன் மிசனின் முதல் கிறிஸ்தவர்கள். யாழ்.குடா நாட்டில் மிசனரிமாரின் பணிகள் தொடங்கிய சில ஆண்டுக்குள் பன்னிரண்டு தமிழ் பாடசாலைகள் மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. மிசனரிமார் வந்து ஐந்து வருடங்கள் முடிவில் தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, உடுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, ஆகிய ஐந்து இடங்களில் மிசன் ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன. இவற்றை மையமாகக் கொண்டு வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு பகுதியைச் சேர்ந்த எட்டு கோவிற்பற்றுக்களில் மிசன் பணிகள் மிசனரிமாரினால் மேற்கொள்ளப்பட்டன.

**அளவெட்டிப் பகுதியில் அமெரிக்கன் சிலோன் மிசனின் பணிகள்**

அளவெட்டிப் பகுதியில் 1825ம் ஆண்டு மிசன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அளவெட்டி தெற்கு கேல்வத்தை (தற்போது கலைநகர் என அழைக்கப்படுகிறது) என்ற பகுதியில் மிசன் பணிகள் டானியல் பூவர் குருவினால் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வூரைச் சேர்ந்த அன்னக்கொடி என்பவரால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட காணியில் கல்விப்பணிக்காகவும் வழிபாட்டிற்காகவும் ஒரு கட்டிடம் அமைப்பதற்கு 1831ம் ஆண்டு யூலை மாதம் 4ம் திகதி டானியல் பூவரினால் அத்திவாரம் இடப்பட்டு கட்டப்பட்டது. இதுவே அளவெட்டியின் முதலாவது மிசன் பாடசாலையாகும். பின்னர் அளவெட்டியில் கருகப்புலம், மலைவேம்படி ஆகிய இடங்களிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அளவெட்டி தெற்கு கேல்வத்தைப் பகுதியில் ஆரம்பப் பாடசாலை வளாகத்தில் வழிபாட்டிற்கென புதிதாக ஓர் ஆலயம் அமைக்கப்பட்டு 1853 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ம் திகதி அது பிரதிஸ்டை செய்யப்பட்டது. இந்த நாளே அளவெட்டி அமெரிக்கன் மிசன் திருச்சபையின் உதய நாளாகும். அமெரிக்கன் மிசனால் கிராமங்களில் எழுப்பப்பட்ட இரண்டாவது ஆலயம் இதுவேயாகும். இது 1870 இல் ஒரு திருச்சபையாக அங்கீகாரம் பெற்றது.

அளவெட்டி தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஆலயம் போக்குவரத்துக்கு வசதிக் குறைவாக இருந்தமையாலும் சபை மக்கள் அளவெட்டிக் கிராமம் முழுவதும் பரந்து வசித்தமையாலும் எல்லோருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியாக அமையக்கூடிய வகையில் 1928ம் ஆண்டில் அளவெட்டி மேற்குப் பகுதியில் திரு.முத்துக்குமாரு என்பவரால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட காணியில் புதிய தேவாலயம் சபை மக்களின் முயற்சியால் அமைக்கப்பட்டது. இதுவே நாம் இன்று வழிபடும் தேவாலயமாகும். இன்று இத்தேவாலயம் 90 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

அளவெட்டி தெற்கில் கேல்வத்தை, மேற்கில் நாக்கணாவத்தை ஆகிய இரு பகுதிகளிலும் 1960ம் ஆண்டு காலப்பகுதியில் சிற்றாலயங்கள் அமைக்கப்பட்டன. இவ்விரு சிற்றாலயங்களிலும் இன்றுவரை வேத பாட வகுப்புக்கள், குறுகிய நேர வழிபாடுகள், மற்றும் சிறப்பு நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. 1986 – 1989 காலப்பகுதியில் தேவாலய வளாகத்தில் திருச்சபை மண்டபம் ஒன்று கட்டப்பட்டு வேலைக்குச் செல்லும் குடும்பத்தவர்களின் பிள்ளைகளினை பராமரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இப்பணி தற்போது முன்பள்ளி பணியாக முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன் பெண் பிள்ளைகளுக்கான தொழிற்பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்பட்டது. திருச்சபை பணிகளை பொறுத்தமட்டில் ஞாயிற்றுக்கிழமை காலை வழிபாடும் ஏனைய சிறப்பு தருணங்களுக்கான வழிபாடுகளும், விசுவாசிகளின் இல்லங்களில் இல்ல வழிபாடும், சிறுவரின் வேதப்பாட வகுப்புக்களும் வாலிபர், பெண்கள் சங்க பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்விதம் நீண்டதொடு வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட அளவையூர் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை இன்றும் இக்கிராமத்தில் ஓர் கலங்கரை விளக்காக திகழ்கிறது என்பதில் பெருமை கொள்கிறோம்.

**அருள்திரு.எ.இராஜ்குமார்**
**சபைக்குரு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவையூரும் அருணோதயக் கல்லூரியும்

யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் நறுமணம் கமழும் அளவையூரிலே சாதனைகள் பல படைத்து, ஓங்கியுயர்ந்து வளர்ந்து இன்று பெரு விருட்சமாக விளங்கும் அருணோதயக் கல்லூரியின் புகழ் உலகெங்கும் சிறப்பாகப் புகழப்படுகின்றது. பெருவிருட்சத்தில் பல கனிகள் இருக்க அதை நாடி பறவைகள் வருவது போன்று, அருணோதய அன்னையின் கல்வியாகிய கனியைப் பறிக்க அளவையூரின் நாலா பக்கங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பெறுகின்றார்கள். அளவெட்டியின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைந்தது அருணோதயக் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் எனலாம்.

இவ்வாறு புகழ் பெற்று மிளிரும் அன்னையை ஆக்கி, அவளது வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று என்றும் எம்மவர்களின் மனதிலே குடிகொண்டிருப்பவர் அருணாசல உடையாரேயாவர். அளவெட்டிக் கிராமத்திற்கு மட்டுமல்லாமல் அயல் கிராமங்களுக்கும் கல்விக்கண் கொடுத்த பெரியார். இவர் உத்தியோகம் வகித்ததோடு பெரும் பிரபுவுமாக இருந்தவர். ஆங்கிலக் கல்வி பெறுவதற்காக அளவெட்டிச் சிறுவர்கள் 10 மைல் தூரம் நடந்து போய் வருவதைக் கண்ட உடையார் இக்குறையை எப்படிப் போக்கலாம் என்று சிந்தித்தார்.

இவர் ஒரு சிறந்த சமயப்பற்றுக் கொண்டவராகவும், பக்தியுடையவராகவும் இருந்தார். கிறிஸ்தவ சமயத்தினரின் சமயப்பரப்பலினால் பல கிராமங்கள் அதிலிருந்து தப்பி வாழவே தலைப்பட்டன. அத்தோடு அவர் நாவலர் அவர்களின் சைவசமயப்பிரசங்கங்களால் கவரப்பட்டு பணம் படைத்த சைவசமயச் செல்வந்தர்களுக்கு அறைகூவலும் விடுத்தார். அப்படிப்பட்டோர் ஒரு பாடசாலையை உங்களது ஊர்களில் அமையுங்கள் என்பதாகும். அதன் தொடராகவே பல மைல் தூரம் நடந்து சென்று ஆங்கிலக்கல்வியைக் கற்றுவந்த மாணவர்களின் நலன் கருதி, ஏற்கனவே அளவெட்டியில் தொடக்கப்பட்ட சிறு சைவப் பாடசாலைகள், அருணாசல உடையார் மனதிலும் தானும் ஒரு சைவ ஆங்கில பாடசாலையினைத் தொடக்கி சைவத்தினைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அளவெட்டியில் வசிக்கும் கல்வி கற்ற சிலரை ஆலோசித்ததன் பெயரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1894ம் ஆண்டு தனது காணியில் தனது செலவில் ஒரு கிடுகுக் கொட்டகை அமைத்து ஒரு பாடசாலையை அமைத்தார். ஒரே நாளில் இரண்டு தனித்தனி இடங்களில் இரண்டு பாடசாலைகள் அமைக்கப்பட்டன. ஒன்று அளவெட்டியில் ஆங்கிலப் பாடசாலையாக இயங்கியது. இதுவே பின்னாளில் அருணோதயக் கல்லூரி என்ற பெயர் பெற்றது. மற்றயது தமிழ்ப்பாடசாலையாக இயங்கி நாகபூசணி வித்தியாலயமாகப் பெயர் பெற்றது. தொடர்ந்து இப்பாடசாலை அருணாசல வித்தியாலயம் என்ற பெயரோடு இயங்கி வருகின்றது.

1894 இல் ஓர் ஓலைக்கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு இன்று வளர்ச்சி பெற்று அருணோதயக் கல்லூரியாக சிறந்து விளங்கிக்கொண்டிருக்கின்றது. இக் கல்லூரி அளவெட்டிக் கிராமத்தையும் அயல்கிராமங்களில் சில பகுதிகளையும் வாழ்வித்த ஒரு கலைக்கோயிலாகும். அளவையூர் ஒரு விவசாயச் செழிப்புள்ள கிராமமாகும். இன்று எமது கிராமத்தில் வருமானமும் வாழ்க்கை வசதியோடும் பலர் வாழ்வதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதற்கான அடிப்படை இரகசியம் பல ஆண்டுகளுக்கு முன்னர் நாம் கல்வித்துறையில் அருணோதயாவில் பெற்றுக்கொண்ட அருட்கடாட்சமே ஆகும். நிலத்தையும் கொட்டிலையும் உபகரித்து, ஆசிரியர்களையும் நியமித்து கிராமத்தின் அருணோதய விளக்கை ஏற்றி வைத்தவர் அருணாசல உடையார். இக்காலத்தில் “உடையார் பாடசாலை” என அழைக்கப்பட்டது. இவர் 1894ல் இருந்து 1919 ஆம் ஆண்டு வரை பாடசாலையை நிர்வகித்ததோடு, பாடசாலை முகாமையாளராகவும் இருந்தார். 1899இல் முதலாம் தர அரசாங்க நன்கொடை பெறும் ஆரம்ப ஆங்கில பாடசாலையாக பதியப்பட்டது.

அருணாசல உடையாரைத் தொடர்ந்து 1920இல் இவரது மகன் திரு அ.சுப்பையா பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இக்காலத்தில் 6,7,8 ஆம் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை வளர்ச்சியடைந்தது. 1929 வரை ஆண்கள் பாடசாலையாக இருந்த இப்பாடசாலையில் இவ்வருடத்திலிருந்து பெண் பிள்ளைகளும் சேர்க்கப்பட்டமையால் அளவெட்டிக் கலவன் பாடசாலை என பெயர் மாற்றம் பெற்றது. 1945 இல் எஸ்.எஸ் சீ வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு 1950 இல் பரீட்சைக்கு முதன்முதல் தோற்றிய மாணவர்கள் பலர் சித்தியடைந்தனர். இக்காலத்தில் விஞ்ஞான கூடங்கள் கட்டப்பட்டு, இரசாயனம், பௌதீகம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரவியல், விலங்கியல் ஆகிய உயர் தர வகுப்புக்களுக்கான பாடங்கள் கற்பிக்கப்பட்டன. நூல்நிலையமும் ஆரம்பிக்கப்பட்டது.

1951இல் கல்லூரி இரண்டாம் தர உயர்தர பாடசாலை அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டு அருணோதயக் கல்லூரி எனப் பெயர் பெற்றது. 1953இல் சாரணர் படையணி முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டது. 1960ல் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழு முதன்முறையாக மாவட்டச் சம்பியனானது. ஹொக்கி விளையாட்டும் இலங்கையிலேயே குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றது. 1961இல் அரசாங்கப் பாடசாலையாக கையளிக்கப்பட்டது. 1969ல் கல்லூரியின் 75ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. 1980ல் உடற்பயிற்சி ஆசிரியர் திரு.ஏ.தம்பித்துரை அவர்களின் பயிற்சியில் சென்ற உடற்பயிற்சிக் குழு தேசிய ரீதியில் தங்கப்பதக்கத்தினை அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியில் பெற்று சாதனை படைத்தது.

1992.06.15 இல் நாட்டின் நிலைமை காரணமாக கல்லூரி இடம்பெயர்ந்து இராமநாதன் கல்லூரியில் பகுதி நேரமாக வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. 1993.10.01இல் யாழ் மாவட்டத்ததை விட்டே இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. அச்சமயம் சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இயங்கியது. இவ் இடப்பெயர்வு காலத்தில் மாணவர்களின் வரவு படிப்படியாக குறைந்து சென்றது. இக்காலப்பகுதி கல்லூரியின் வளர்ச்சிப்பாதையில் ஒரு வீழ்ச்சி என்றே குறிப்பிடலாம். 1994ல் பழைய மாணவர் சங்கம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி நூற்றாண்டு மலரையும் வெளியிட்டது. 1997ல் சிதைந்து போன கல்லூரியின் கட்டமைப்பு மீளமைக்கப்பட்டு மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.

தற்போது கல்லூரியானது மீண்டும் வளர்ச்சிப்பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. 2010.02.15ல் எமது கல்லூரி 1AB பாடசாலையாக மீண்டும் தரம் உயர்த்தப்பட்டு 2013,2014ல் பல மாணவர்கள் பொறியியல் துறைக்கும் மருத்துவத் துறைக்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

'உள்ளது உணர்' என்ற மகுட வாசகத்தை தாரக மந்திரமாகக் கொண்டு வளர்ச்சிப்பாதை நோக்கி சென்று கொண்டிருக்கின்ற எமது கல்லூரியானது கல்வியில் மட்டுல்ல, விளையாட்டுத் துறையிலும், ஏனைய


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளை சாதித்து வருகின்றது. பௌதீக வளத்திலும் பல மாற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது. கல்லூரியின் வடக்குப் புறத்திலுள்ள 22 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரி வளாகம் மேலும் விஸ்தீரணம் செய்யப்பட்டுள்ளது. ஆரம்பபிரிவு வகுப்புகளுக்கென இரு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டு 03.03.2017ல் திறந்து வைக்கப்பட்டது. ஆரம்பப்பிரிவு ஒரே வளாகத்தில் இயங்கி வருவது சிறப்பம்சமாகும்.

125ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் நிலையில் எமது கல்லூரி இன்றுள்ளது. அருணோதயக் கல்லூரி வளர அளவெட்டிக் கிராமமும் வளர்ந்தது. கிராமத்தின் கல்வி வளர்ந்தது. உடையாரால் தொடக்கி வைக்கப்பட்ட இக் கல்லூரி, இன்று பல வகையிலும் விரிந்து பரந்து உயர்வடைந்து எமக்கும் எமது ஊருக்கும் பெருமை தந்து, எமது ஊர் மத்தியில் இருப்பது எமக்கெல்லாம் மகிழ்வைத் தருகின்றது.

**நா.கேதீஸ்வரன்(BA.Dip.in.Education)**

அதிபர்,

யா/அருணோதயக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நிகழ்வு 2017




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வாசிப்பு மாதம் 2017 இல் தரம் 08 மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியில்

## முதலாம் இடம் பெற்ற கட்டுரை

(நூல்கள் எனது நண்பன்)

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என வள்ளுவர் திருக்குறளின் தொடக்கத்திலேயே எழுத்தை மையப்படுத்தியுள்ளார். பல இதழ்கள் சேர்ந்து ஒரு பூவாகி பல பூக்கள் சேர்ந்து மாலையாகிறது. அதே போல பல எழுத்துக்கள் சேர்ந்து சொற்களாகி பல சொற்கள் சேர்ந்து வாக்கியமாகி பல வாக்கியங்கள் சேர்ந்து பந்தியாகின்றது. பல பந்திக் கூட்டங்கள் சேர்ந்து அத்தியாயம் ஆகின்றது. பல அத்தியாயங்களை கொண்டதாகவே நூல் அமையும். சிறந்த நூல்கள் அருமையான தேனைப் போன்றவை. பூவிலுள்ள தேனை தேனீ சேகரித்து தேன் வதையை உருவாக்குவது போல நூல்களில் உள்ள விடயங்களை படிக்க வேண்டும். இந்த உலகில் நூல்களைப் போல் ஓர் சிறந்த நண்பன் எங்கும் கிடைக்கமாட்டான். நூல்கள் எச்சந்தர்ப்பத்திலும் எங்கு வேண்டுமானாலும் எமக்கு கை கொடுக்கும் ஓர் சிறந்த நண்பன் ஆவான். நல்ல பல அருமையான நூல்கள் உலகில் உள்ளன. நூல்களின் சிறப்பு சங்ககாலம் தொட்டு காணப்படுகின்றது.

நூல்களின் சிறப்பைப்பற்றி திருவள்ளுவர், ஔவையார் போன்றோர் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளனர். நூல்கள் எம் நண்பர்கள் என பல பாடல்களை பாடியுள்ளனர். நூல்களின் சிறப்பை அறிந்திருந்த சங்ககாலம் தொட்டு வந்த முன்னோர்கள் பழைய வரலாறுகளை நூலாக்கங்களாக மாற்றியுள்ளனர். கவிஞர்கள், புலவர்கள் கூட நூல்களின் சிறப்பைப் பாடியுள்ளனர். உலகிலேயே பலம் வாய்ந்த அணுகுண்டு கூட ஒருமுறை தான் வெடிக்கும் ஆனால் புத்தகம் படிக்கும் போதெல்லாம் வெடிக்கும் என கவிஞன் ஒருவன் வர்ணித்துள்ளான். அவ்வளவு பலம் வாய்ந்த பெறுமதியான நூல்களே எமது நண்பன் ஆவான். உலகிலுள்ள அனைத்து நாடுகளும் நூல்கள் எனது சிறந்த நண்பன் எனும் கூற்றை ஏற்றுக் கொண்டவை ஆகும். அதனாலே தான் தமது அரசியல் யாப்பு, பொருளாதார விபரங்கள் என பலவற்றை நூல்களாக மாற்றியுள்ளனர். நூல்களுக்கு எங்கும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மதிப்பு தான். அதே போன்று சிறந்த நண்பனான நூல்களை கற்ற எமக்கும் சிறப்புத்தான். நூல்கள் என்பவற்றுக்கு ஏடு, பனுவல் என பல பெயர் கூறுவர். அருமையான நூல்கள் ஒரு மனிதனை அறவழியில் இட்டுச் செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நூல்கள் எமது நண்பன் என்பது ஆன்றோர், சான்றோர் அனைவரும் அறிந்து ஏற்றுக்கொண்ட ஓர் விடயமாகும். நூல்களை எமது நண்பன் பற்றி பத்திரிகை மற்றும் பல சாதனங்களில் பல கவிதைகள், பாடல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு சிறந்த நூலிற்கு கோடி பொன் கொடுத்தாலும் அது மிகையாகாது. பல நூல்களைக் கற்ற ஒருவரையும் ஓர் மன்னனையும் தராசில் வைத்தால் மன்னனை விட பல நூல்களை கற்றவருக்கே சிறப்பாகும். இதனையே திருவள்ளுவர் " மன்னனும் மாசறக்கற்றோனும் சீர்தூக்கின் மன்னனை விட கற்றோருக்கே சிறப்பு" என கூறியுள்ளார்.

நூல்கள் ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கியமானதொரு நண்பன் ஆவான். "ஒருவனுக்கு சிறந்த ஆசான் அவன் இறுதியாக செய்த தவறு தான்" என கவிதை உண்டு. மனிதனைத் திருத்தும் ஆசான் நூல்கள் ஆகும். நூல்கள் ஒருவனின் வாழ்க்கையில் நண்பனாக அமைந்தால் அவனது வாழ்க்கை சிறக்கும் என பெரியோர்கள் கூறுகின்றனர். ஆனால் தற்காலத்தில் ஞாலத்தில் வாழும் நாம் நூல்களை படிக்காமல், பேணாமல் விட்டு விடுகின்றோம். இதற்கு காரணம் தொழிநுட்ப வளர்ச்சியே ஆகும். இத்தொழிநுட்ப வளர்ச்சியால் நூல்களை கணனியில் வடிவமைத்துக் கொள்கின்றனர். பாடசாலை மாணவர்கள் பாடசாலைப் பருவத்தில் அதிக நூல்களை வாசிக்க வேண்டும். நூல்கள் அவனுக்கு கை கொடுக்கும். இதனையே "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என கூறியுள்ளனர். சிறந்த நூல்கள் நூலகத்தில் காணப்படும். ஒரு வாரத்தில் குறைந்தது மூன்று தடவையாவது நூலகத்திற்கு செல்ல வேண்டும். ஒரு நாளில் ஒரு மணித்தியாலமாவது சிறந்த நூல்களை தேடி வாசிப்பதற்கு செலவிட வேண்டும். நூல் அவனை சிறந்த நண்பனாக இருந்து மேன்மை அடையச்செய்யும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனித வாழ்க்கையில் மிக முக்கியமானவை நூல்கள் ஆகும். பல அருமையான நூல்களை வாசித்தே பல தலைவர்கள் உருவாகியுள்ளனர். நூல்களின் சிறப்பை பற்றி அதிகமாக விபரிக்கலாம். மாணவப்பருவத்தில் நூல்களை நண்பனாக்கிக் கொண்டால் வாழ்வு சிறக்கும். பள்ளமான இடத்தைப் பார்த்து பாயும் வெள்ளம் போல் சிறந்த நண்பனான நூல்கள் உள்ள இடத்திற்கு சென்று நூல்களை பயிலுவோம்.

**செல்வன் ப.சஞ்சய்**
**தரம் - 08**
**யா/அருணோதயக் கல்லூரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் 2017 இல் தரம் 12 மாணவர்களுக்கான கவிதைப்போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை

(நூல்கள் எனது நண்பன்)

குவலயமெங்கும் குழுமியிருக்கும்
கும்மிருள் மாயையை நீக்கி
குலங்கள் யாவும் சிறக்கும் படியாய்
குயிலின் கானமாய் இசைத்தவனே!

ஆசான் போல் நீ இருந்தாய்
அறிவு ஒளி பெருகிட,
பெற்றோராய் நீ இருந்தாய்
பயன்தரு அறிவுரை கூறுவதில்

என் மதி தழைத்ததும் உன்னிடத்திலே!
என் தனிமையைத் தொலைத்ததும் உன்னிடத்திலே!
பிறரின் பாராட்டு பெற்றதும் உன்னாலே!
பிறர் போற்ற வாழ்வதும் உன்னாலே!

என் வாழ்வைப் பேரொளியாக்கிய
என் உயிர்த்தோழனே! வேண்டும்
உன் நட்பு என் உயிர் மாயும் வரை!!!

செல்வி கு.ஜனுசியா
தரம் - 12
யா/அருணோதயக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வாசிப்பு மாதம் 2017 இல் வாசகர்களுக்கான போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை

(நூல் எனது நண்பன்)

அறிவார்ந்த சமூகத்தை படைக்கும்
அறிவின் இலக்கணமே
நூல் எனும் என் நண்பன்

கற்பனைத் திறனுடன் மனத்தூய்மை
உள்ள உறுதி வளர்த்து
புத்துலகை கட்டியெழுப்பும்
புதுமையை தருபவன்
நூல் எனும் என் நண்பன்

மனதை ஒரு முகப்படுத்தி
நினைவுத்திறன் கூட்டும்
உன்னத பணியுடன்
தனிமைச் சிறையையும் தகர்த்தெறிவான்
நூல் எனும் என் நண்பன்

நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு
என்றும் உணர்த்தி
எங்கோ நடந்தவை எவரோ அறிந்தவற்றை
எங்கெங்கோ இருப்பவர் அறிந்திடச் செய்வான்
நூல் எனும் என் நண்பன்

இப்படித்தான் வாழ்ந்தோம் என்ற
முன்னோர் அறிவையும்
இப்படித்தான் வாழ வேண்டும் என்ற
பெரியோர் கருத்தையும் கண் முன்னே கொண்டு வருவான்
நூல் எனும் என் நண்பன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரமாயிரம் மலர்களின் மகரந்த சேகரம்
தேன் கூடு ஆயின்
ஆயிரமாயிரம் கருத்துக்களின் சேகரம்
நூல்கள் எனலாம்

நூலெனும் என் உற்ற நண்பன்
உண்மையின் ஊற்றுக் கண்ணாவான்
புத்துலகு நோக்கி எம்மை வழிநடத்தி
அறிவுச் சுரங்க வாயிலுக்கு கொண்டு செல்வான்

கிரேக்க சிந்தனையாளர் சாக்ரட்டீஸ்
நஞ்சு வாயில் ஊற்றும் வரை நூலைக் கொண்டு சென்றார்
இலிபியா புரட்சியாளன் உமர் முக்தர்
தூக்குக் கயிறு கழுத்தில் விழும் வரை நூலின் கை பற்றியிருந்தார்

நேருதான் மறைந்த பின்னும்
தன் கல்லறையை நூல் கொண்டு மலரச் சொன்னார்
பேரறிஞர் அண்ணாவோ தான் கற்ற நூலினை படிக்கும் வரை
உயிர் காக்கும் அறுவை சிகிச்சையினை தள்ளித்தான் வைத்தார்

உற்ற நூல் நண்பன் துணையிருந்தால்
உலகில் உன்னத நிலையடைந்து
உத்தம புத்திரராய்
உருப்பெறலாம் என்பதே என் திண்ணம்

**திருமதி.ரா.நாகவரன்**
**ஆசிரியர்**
**அளவெட்டி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வாசிப்பு மாதம் 2017 இல் வாசகர்களுக்கான போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

### தளராத வாசிப்பே தாழ்வில்லாத வாழ்வை உருவாக்கும்

புத்தகம் வாசகனைப் பார்த்துக் கூறியது "என்னை மேலிருந்து கீழாகப் படி உன்னை கீழிலிருந்து மேலாக உயர்த்துகிறேன்" என அன்று கவிஞன் வாலி கூறியுள்ளார். அந்த வகையில் தளராத வாசிப்பே மனிதனைப் பூரணப்படுத்தவல்லது. உண்மை தான் மனிதனின் உடல் வளர்ச்சிக்கு உணவும் மருந்தும் எவ்வாறு உதவி செய்கின்றனவோ, அதுபோலவே மனிதனின் மனவளர்ச்சிக்கு புத்தகங்களும், வாசிப்பும் உதவுகின்றன. புத்தகமொன்றை வெற்றிகரமாக வாசித்து முடிக்க ஐந்து படிமுறைகளை பின்பற்ற வேண்டும். அவையாவன

SQ3R

S – Survey (தேடிப்பார்த்தல் )

Q – Question (கேள்வி எழுப்புதல் )

R – Read (வாசித்தல் )

R – Retrive (மீளவும் பார்த்தல் )

R – Review (விமர்சித்தல் )

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படும்" என்கிறார் விவேகானந்தர். என்று மொழி உருவானதோ அன்றே வாசிப்புப் பழக்கமும் மனிதர்களிடையே உருவானது. இந்தப் பூவுலகில் தோன்றிய அறிஞர்கள், மாமேதைகள் அனைவருமே வாசிப்புப் பழக்கம் மூலம் உருவானவர்களே. "சிறந்த புத்தகம் சிறந்த நண்பன்" என்று கூறுவார்கள். எமது ஓய்வு நேரங்களில் நாம் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாமும் இவ்வுலகில் ஒரு மாமேதை ஆகலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நாம் சிறு வயது முதல் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஓய்வு நேரங்களில் சிறந்த புத்தகங்களை நாம் வாசிப்பதனால் நமது அறிவு விருத்தியடைவது மட்டுமல்லாது ஓய்வு நேரத்தையும் பயனுள்ளதாகக் கழிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மையில் புத்தகம் என்பது காரிருளில் செல்பவர்களுக்கு பேரொளியாகவும், வழிதவறியவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழும். எமக்குத் தேவையான தகுதியான புத்தகங்களை மட்டும் தெரிந்தெடுத்து வாசிக்க வேண்டும். இளம் சமுதாயத்தின் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தவே ஏப்ரல் 23ம் திகதி உலகப் புத்தகதினம் கொண்டாடப்படுகின்றது.

நூல்கள் நூலகங்களில் தூசு படிந்து இருக்கக் கூடாது. வீடுகளில் அலங்காரப் பொருளாக அன்றி அறிவைப் பெறும் பொருளாக மாற வேண்டும். இவை அனைத்தும் நிகழ வேண்டுமாயின் மானிடர்களின் உள்ளத்தில் அறிவுத்தாகம் உணரப்பட வேண்டும்.

"கண்டதைக் கற்க பண்டிதனாவான்" என்பது பழமொழி. ஆனால் இன்று நம்மில் பலருக்கு வாசிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. காலம் போகும் வேகத்தில் மனிதர்களின் கால்கள் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில் ஒரு மனிதன் தன்னை மட்டுமன்றி தன்னுடைய சமூகத்தையும் பற்றி எப்பொழுது சிந்திக்க தொடங்குகின்றானோ, அப்பொழுது தான் அவன் வரலாறுகளில் பதியப்படும் நபராக மாறுகின்றான். அப்படி ஒரு மனிதனை உருவாக்குவதில் பெரும்பங்கு வாசிப்புக்கு இருக்கின்றது.

எந்த ஒரு மனிதன் வாசிப்பதில் அலாதியான அக்கறை காட்டுகின்றானோ, அவன் வரலாற்றில் இடம் பெற முயற்சி செய்கின்றான் என்றே அர்த்தம் கொள்ளலாம். ஒரு வடிவமே இல்லாத கல்லை சிற்பி எவ்வாறு செதுக்கி அதை நிலையாக மாற்றுவாரோ, அதைப் போன்று தான் இலக்கே இல்லாத ஒரு மனிதனை இலக்கை நோக்கி இட்டுச் செல்வது தளராத வாசிப்பே ஆகும்.

ஒரு மனிதனுக்கு சுவாசிப்பு என்பது எவ்வாறு முக்கியமோ, அதே போன்று தான் வாசிப்பு பழக்கமும் முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும். ஒரு மனிதன் சுவாசிப்பதன் மூலம் எவ்வாறு அவனது ஆன்மா இயங்குகின்றதோ, அதே போன்று அவனிடம் வாசிப்பு பழக்கம் இருக்கும் வரை அவன் எந்த தடைகள் வந்தாலும் அதையெல்லாம் தாண்டி வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருப்பான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் சிறந்த வாசகனாக முடியும். ஒரு நாளைக்கு குறைந்தது 30 நிமிடங்களையாவது வாசிப்பதற்காக ஒதுக்க வேண்டும். ஒரு வருடத்தில் 50 நூல்களையாவது படிக்க வேண்டுமென்ற திட்டமிடல் இருக்க வேண்டும், நூலகத்தை சரிவர பயன்படுத்துதல், வாசிக்கும் போது அமைதியாகவும், நிதானமாகவும் இருத்தல் வேண்டும்.

"இந்த வாழ்வின் ஆகச்சிறந்த கேளிக்கை கொண்டாட்டம் ஓசையின்றி நடக்கின்றது அது தான் புத்தக வாசிப்பு", "நல்ல புத்தகங்களை வாசிக்காத ஒருவன், வாசிக்கவே தெரியாதவனைவிட உயர்ந்தவன் அல்ல", "மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்", "புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே" , ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தை தொடங்கி வைக்கிறான் வாசகன் அதனை முடித்து வைக்கிறான்".

இவ்வாறான பொன்மொழிகள் புத்தகங்களின் பெருமை பற்றியும், புத்தக வாசிப்பின் அருமை பற்றியும், நூலகங்களின் பயன்பாடு பற்றியும் எடுத்துரைக்கின்றன. தளராத வாசிப்பின் மூலம் தேடித் தேடிப் பெற்ற கல்வி எக்காலத்திலும் அழிவதில்லை. ஆகவே தளராத வாசிப்பின் மூலம் தாழ்வில்லாத வாழ்க்கை வாழ்வோமாக!

**"தேடித் தேடிப் பெற்ற பொருள்**
**வாழ்வில் எளிதில் அழிந்ததில்லை**
**தேடும் முன்பே வந்த பொருள்**
**வாழ்வில் எளிதில் நிலைத்ததில்லை"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம் சென்றிடுவீர் நூற்பயன் நுகர்ந்திடுவீர்

கண்டது கற்கப் பண்டித ராவீர்
என்பது முதுமொழி யாவரும் அறிவீர்
பன்மொழி அறிஞர்கள் எழுதிய நூல்களைக்
கற்றிடக் கற்றிட ஆற்றல் பெருகும்

அறிவுக் களஞ்சியம் போன்ற நூல்களே
ஆராய்ச்சிப் பாதையை அகலக் காட்டும்
சரித்திரம் சாத்திரம் சமய நூல்களை
அறிந்தே நீவிர் வாழ்வில் உயர்வீர்

கதையும் கவிதையும் காவியம் பலவும்
பிறமொழிகளிலும் பலநூறு உண்டு
மலையென வாழ்ந்த மாண்புறு பெரியோர்
எழுதிய நூல்களே எமக்கு அறிவூட்டும்

தேடற்கரிய நூல்கள் பலவும்
நூலகங்களிலே தேங்கிக் கிடக்கும்
ஆண்டாண்டு காலம் கண்ட அனுபவங்கள்
யாவரும் அறிந்திட நூல்களிற் சொல்வர்

மொழிகளைப் பயின்றிட பலவழி உண்டு
எழுத்துருவாகவே மொழியின் வடிவத்தை
இலக்கண இலக்கிய வடிவங் கொண்டு
வழிவழியாகவே நூல்கள் இயம்பும்

நூற்றாண்டு வாழ்ந்த அனுபவம் பெற்றிட
நூல்களை வாசித்து ஆற்றல் பெறுவோம்
பூரணமான மனித வாழ்வினில்
இதயம் களித்திட நூல்களைக் கற்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியோர் பெரியோர் கற்கும் நூல்கள்
வறியோர் வாய்மொழிக் கிராமியப் பாடல்கள்
பாலர் விரும்பும் பலவகைக் கதைகள்
யாவும் கற்றிட நூலகம் சேர்வீர்

இதயங் கவரும் இலக்கியக் காதல்
ஆத்மீகந் தழைக்கும் ஆன்றோர் அறிவுரை
அணுவா யுதங்கள் இலத்திரன் வடிவம்
யாவும் நூல்களில் மேன்மை படைத்திடும்

உலகில் உள்ள நூலகங்களிலே
எமக்கு வேண்டிய நூல்களைக் கண்டு
இணைய வழியினில் இணைந்து கண்டதே
இளைய தலைமுறை காணும் சிறப்பு

காலத்தால் அழியாத ஆழமான கருத்துக்களை
பாலர் முதல் பண்டிதரும் மேன்மையுறக் கற்றிடலாம்
நாளுமிதை மனதினிலே நயம்படச் செயற்படுத்த
நூலகஞ் சென்றிடுவீர்! நூற்பயன் நுகர்ந்திடுவீர்!

**திரு.சி.சிவானந்தராஜா**
**அளவெட்டி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசிப்பும் வாசிப்பும்

மனிதன் உலகின் உன்னத படைப்பு என்பது நாம் அறிந்ததே.அத்தகைய படைப்பு இன்றைய உலகில் படும் பாடும், படுத்தும் பாடும் எடுத்துச் சொல்ல முடியாத அளவிற்கு கணக்கற்றது. பகுத்தறிவு என்கின்ற பரிணாம வளர்ச்சி மனிதனை மாண்புறும் படைப்பாக தூக்கி நிறுத்தியது. அதனிலும், இன்றைய சூழலில் அவனது வளர்ச்சி அளப்பெரியது. அறிவுத்துறையில், அறிவியல்துறையில் அகலக்கால், ஆழக்கால் வைத்து அனைத்தையும் ஆய்ந்து. அளந்து கொண்டிருக்கின்றான். நவீன தொழில் நுட்பங்களுடன் நாளும் பொழுதும் தன் நேரங்களை செலவு செய்து கொண்டிருக்கின்றான்.

மனிதனின் ஆரம்பங்கள் இவ்வளவு வசதி வாய்ப்புக்களை கொண்டிருக்கவில்லை என்பது எமக்குத் தெரியும். அறிவியல், விஞ்ஞான தொழில்நுட்பங்கள் பாரிய வளர்ச்சி கண்டுள்ள இந்த சூழலைத்தான் மனிதன் வளர்ச்சியுற்ற சூழல் எனக் கருதுகிறான். ஆனால் உண்மையில் அறிவியலை வசப்படுத்திய மனிதன் தனது அடிப்படைப்பண்புகளை தொலைத்து புனிதம் என்கின்ற பண்பில் இருந்து மாறி படிப்படியாக மாசுபட்டுக் கொண்டிருக்கிறான் என்பதே மறைமுகமான உண்மையாகும். அறிவையும் ஆற்றலையும் வளர்க்கின்ற மனிதன் பண்பையும் பாசத்தையும் தொலைக்கின்ற போது எப்படி அதனை வளர்ச்சி என்று கருதி திருப்தி கொள்ள முடியும்? ஓசோ குறிப்பிட்டது போல் “இன்றைய அறிவியல் குறிதவறாத ஏவுகணைகளையும் நெறி தவறிய மனிதர்களையும் தந்து கொண்டிருக்கின்றது.” என்பது நிதர்சனமான வரிகளாகும்.

நாம் பெற்று அனுபவித்து கொண்டிருக்கின்ற இந்த வாழ்க்கையின் பரபரப்பிற்கு நடுவே எப்போதாவது இழந்த வாழ்க்கை ஒன்றும் இருக்கின்றது. என்பதை சிந்தித்து பார்த்தோமா? மனிதம் வாழ்ந்ததும், மனங்கள் பேசியதும், உறவுகள் மலர்ந்ததும், உண்மையாக சிரித்ததும், உணர்வோடு வாழ்ந்ததும், உண்மையில் உணர்ந்து தொலைந்து போன அந்த வாழ்க்கையில்தான். அன்று போலிகள் மனிதனைச் சுற்றி வேலிகள் போடவில்லை.இயற்கை வாழ்வுடன் சங்கமித்து இயல்பாக வாழ்ந்து இரவு, பகல், பனி, குளிர், வெயில், மழை, இறப்பு, பிறப்பு, வலி, அன்பு, பாசம், நேசம் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் இரசித்து சுவைத்து மகிழ்ந்த நாட்கள் அவை. எதையும் எதுவும் பாதிக்கவில்லை,யாரும் யாருக்கும் போதிக்கவில்லை. அது அதுவாகவே இருந்தது. ஆனந்தம் அதிகமாக இருந்தது. ஆரோக்கியம் இயற்கையாக மலர்ந்தது.அன்றைய தாத்தாவும் பாட்டியும் இன்றும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள் என்பதே அன்றைய வாழ்க்கைக்கு இன்றும் ஆதாரம். அத்தகைய ஒரு வாழ்க்கைச் சூழலில் இன்று வாழ்கின்றோமா?

மனித மனங்களின் மாற்றம் எத்தனையோ ஏமாற்றங்களை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்திருக்கின்றன. மனிதனால் மாற்றப்படுவதுதான் சூழல். மனிதன் தனது மனநலத்தையும் சிந்திக்கவில்லை, சமூகநலத்தை பற்றியும் எண்ணவில்லை. சிந்தனைகள் சிறிதாகிவிட்டன. தன்னளவில் மட்டும் குறுகியதாகி விட்டன. தான் என்கின்ற குறுகிய வட்டம் நலம் என்கின்ற பரந்த தேவையை மாசுபடுத்தி விட்டது. ஒரு உலகின் அடிப்படை அலகாகிய ஒவ்வொரு தனிமனிதனும் தான் சமூகமாகி, பிரதேசமாகி, நாடாகி உலகாகின்றான் என்பதை உணர்ந்தானில்லை. நலம் என்கின்ற போது ஒரு மனிதனை பொறுத்தவரையில் உடல்நலம், உளநலம், உயிர்நலம் என்பவற்றைக் கருதலாம். உடல் நலமென்பது உணவுப்பழக்கம், உடல்பயிற்சி போன்றவற்றால் பேணப்பட வேண்டிய விடயமாகும்.

இவைகள் கூட அன்றைய இயற்கை வாழ்வில் கலந்து இருந்தன.அதனால் மகிழ்ந்திருந்தார்கள். உழைத்தான், உண்டான், உறங்கினான், நிம்மதியும், நித்திரையும் நிலைத்திருந்தன. இவ்வாறே உயிர்நலம் என்பது அவர்கள் அறியாமலேயே ஆன்மீகத்தால் கட்டியெழுப்பப்பட்டது. நலம்,யோகம்,தியானம், போன்ற உயரிய பண்புகளும் பழக்கவழக்கங்களும் உயிரையும், உள்ளத்தையும் பக்குவப்படுத்தியது, பதப்படுத்தியது. அதிலும் முக்கியமாக உளநலம் என்கின்ற விடயத்தை நாம் சற்று ஆழமாக பார்த்தாக வேண்டிய தேவை இன்றைய வாழ்வியல் சார்ந்து முக்கியம் பெறுகின்றது. மனநலம் என்பது தான் மனித நலம். மனிதப்பண்புகளும் நடத்தைகளும் மனப்பண்புகளின் பிரதிபலிப்புகளாகவே காணப்படுகின்றன. மனநலப்பண்புகள் மேம்படுகின்ற போது நல்ல மனிதப்பண்புகள் வெளிப்படும்.

நூலகங்களின் வாசலை பிள்ளைகளுக்கு பழக்கி விட்டால் அவர்களின் வாழ்க்கைப் பயணம் பாதுகாப்பானதாக இலக்கு நோக்கியதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய நம்பிக்கையாகும். வாசிப்பு யோசிப்புக்கான வழிகாட்டி. இன்றைய சந்ததியை அவர்களாக சிந்திக்க தயார்படுத்த வேண்டும். அதற்கு அவர்களோடு அளவாக,அழகாக பேசக்கூடியவை புத்தகங்கள் மட்டும்தான். நல்ல அனுபவங்களை அறிமுகம் செய்வதுதான் கடினமானது. அதனை அறிமுகம் செய்துவிட்டால் அதனை அவர்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டால் அவை இயல்பாக மலரும்.

தேவைக்கு ஏற்றதை தேவையான அளவு தேர்ந்து பெற்றுக் கொள்வதற்கு தெரிந்த இடம் நூலகம் என்கின்ற ஒரு பொக்கிசமாகும். பிறக்கின்ற குழந்தைகளுக்கு நடக்கக் கற்றுக் கொடுப்பது போல் பேசக் கற்றுக் கொடுப்பது போல், உண்மை பேசக் கற்றுக் கொடுப்பது போல் தகுந்த பருவம் அடையும் போது வாசிக்க கற்றுக் கொடுக்க வேண்டும். அன்றாடக் கடமைகளில் ஒன்றாக வாசிப்பு என்பதும் இயல்பாகவே பழக்கமாகி வழக்கமாக வேண்டும். வாசிக்க பழக்கப்படும் குழந்தை அருகில் எப்போதும் ஒரு துணை இருப்பதை தானாக உணர்ந்து கொள்ளும். இது குழந்தைக்கு மட்டுமல்லாது குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவருமே ஏற்பாடு செய்ய வேண்டிய அறிவு பூர்வமான பாதுகாப்பாகும்.எதிர்காலத்திற்கு அத்திவாரம் இடும் பெற்றோர்களே, புத்தகங்களால் உங்கள் வாழ்க்கையை கட்டுங்கள்.அனைத்துச் சூழலிலிருந்தும் அவர்களை பாதுகாத்து கவனமாகக் கூட்டிச் செல்லும் தகுதியும் தரமும் நூல்களுக்கே உரியன. மனநலம் பேண விரும்புபவர்களின் மந்திர மருந்து மனம் விரும்பும் நூல்கள் மட்டும்தான். வீட்டில் ஒரு அறை நூலக அறையாகட்டும். பள்ளிகளில் வகுப்பறை மூலைகளில் ஒரு மூலை வாசிப்பு மூலையாகட்டும். கிராமங்கள் தோறும் நூலகங்கள் நிரம்பி வழியட்டும். நாங்கள் தொலைத்து விட்ட எந்த வாழ்க்கையினையும் மீட்டுத்தரக் கூடிய அல்லது சரி செய்யக் கூடிய ஆற்றலும் அக்கறையும் புத்தகங்களால் பூர்த்தி செய்யப்படும் என்பதை புரிந்துகொள்வோம்.

**திரு.த.ஐங்கரன்.**
**வாசகர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலோசனை சபை அங்கத்தவர்கள்




## வாசகர் வட்ட அங்கத்தவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பின் ஊடாக தேசிய ஒற்றுமை

ஓர் இனத்தின் ஆன்மாவாக கருதப்படுவது அவ்வினத்தின் மொழியாகும். அந்த வகையில் அவ்வினத்தின் பண்பாட்டு பனுவல்களான சமயம், அரசியல், தத்துவம், நாட்டாரியல் ஒழுகலாறுகள், இலக்கியம் போன்றவற்றை வெளித்தெறிப்பு செய்வதும் பிரதிபலிப்புச் செய்வதும் மொழியாகும். ஓர் இனத்தின் அனைத்து விதமான அடையாளமாக மொழி காணப்படுகின்றது.

ஓர் இனத்தின் அனைத்து விடயங்களையும் அறிய முற்படும் ஒருவர் முக்கியமாக அவ்வினத்தின் இலக்கியங்களை ஆராய வேண்டும். அப்பொழுதே அவ்வினம் பற்றிய பருமட்டான முடிவுக்கு வர முடியும். இலக்கியத்தின் மீதான வாசிப்பானது பல சாளரங்களை எம்முள்ளே திறக்கின்றது.

வாசிப்பென்பது உதட்டளவிலே இல்லாது அறிவுக்கண்ணை திறந்து வைக்கும் அறிக்கைக்கான புலமைச்சான்றாக இருக்க வேண்டும். ஒரு குழந்தை கருவிலிருக்கும் போதே வாசிப்பை அறிய முடியும் என அறிஞர்களால் கூறப்படுகின்றது. அதாவது கருவுற்றிருக்கும் தாயானவள் நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் இது சாத்தியப்படுகின்றது.

வாசிப்பானது சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனை செய்தல், நியாயம் கண்டறிதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இதனால் பல இலக்கியங்கள், பிறமொழிகள் என்பவற்றின் அறிவு பெருகின்றது. ஒருவன் வாசிப்பை மேற்கொள்ள பல நோக்கங்கள் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக

1. பொழுதுபோக்கு
2. சிறந்த ஓய்வுக்கான வாசிப்பு
3. தகவல் பெறுதல்
4. அறிவுத்தேடல் என்பவற்றை குறிப்பிடலாம்.

வாசிப்பானது ஒரு மகிழ்ச்சியானதும் சுவாரஸ்யமானதுமான ஒரு செயற்பாடாகும். (Read for fun, Read for pleasure) சுவாரஸ்யமான வாசிப்பின் மூலம் மகிழ்ச்சியுடன் அறிவுத்திறனும் கூடுகின்றது. அதுமட்டுமன்றி ஊடகத்தகவல்கள், இணையச் செய்திகள், இலத்திரனியல் ஆய்வறிக்கை, கட்டுரைகள் என்பவற்றையும் அறிய முடிகின்றது. வாசிப்பின் மூலமாக

மொழித்திறன் விருத்தி சொல்வன்மை, சொல்லாட்சி என்பன விருத்தியடைகின்றது. அது மட்டுமன்றி பொது அறிவு வளர்ச்சியும் ஏனையவர்களின் கலாச்சாரம், பாரம்பரியம் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு வாசித்தலை வளர்த்துக் கொள்வதால் மொழி பெயர்க்கும் ஆற்றல் மெருகூட்டப்படுகின்றது. " மொழிபெயர்ப்பு" என்பது இரு மொழி கற்றறிந்த நிபுணர்களால் மேற்கொள்ளப்படும். அதி உச்சநிலை அறிக்கை தொடர்பாக பிறமொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கும் ஆற்றல் உள்ளவர்கள் போற்றப்பட வேண்டியவர்களே.

பிறமொழியை உரையாடக்கூடிய ஒருவரால் அவருடன் மேலோட்டமாக உரையாட மட்டுமே முடியும். அவரது உள்ளார்ந்த மனநிலை செயல்களை அறிந்து கொள்ள முடியாது.இதற்கு அப்பிறமொழியின் இலக்கியங்கள், நாவல்கள் என்பவற்றை வாசித்து அவர்களின் பாரம்பரியம், நடத்தைகள், பழக்கவழக்கங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. இதனால் தனிநபர்களிடையே பரஸ்பரம் அறிந்து கொள்வதோடு முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ளவும் முடிகின்றது.

நல்லிணக்கம் என்பது ஓர் சமூக எண்ணக்கருவாகும். இரண்டு நபர்களுக்கிடையே ஏற்படும் புரிந்துணர்வே நல்லிணக்கம் என கூறலாம். ("A situation in which two people or groups of people become friendly again after they have argued. Action of making ones view or being comfortable with another") இதன் மூலம் தேசிய நல்லிணக்கம் ஏற்பட்டு தேசிய ஒற்றுமை ஏற்படும் என்பதை உறுதியாக கூற முடிகின்றது.

எனவே வாசிப்பின் மூலமாக மனிதன் பூரணமடைவதுடன் தேசிய ஒற்றுமை ஏற்படும் என கூறமுடிகின்றது.

"உலகை அறியவும்
உன்னதம் காணவும்
ஒற்றுமை பெற்றிடவும்
ஓர் உலகாகவும்
வாசிப்பை உயிர் மூச்சாய் நேசிப்போம்"

**திருமதி.நா.ராஜி**
**அளவெட்டி.**

## சமூகமயமாக்கலின் ஊடே கல்வி - ஓர் கண்ணோட்டம்

இன்றைய உலகமயமாக்கல், நவீனத்துவம் போன்றவற்றினால் உலகம் எவ்வாறு ஒரு கையினுள் சுருங்கியுள்ளதோ அதேபோல் கல்வி வட்டமும் சுழற்சி முறையில் மறைமுகமாக ஒரு வட்டத்தினுள் சுருங்கியுள்ளது.

ஆரம்ப காலங்களிலே நூலகங்கள் ஓர் அறிவுக்களஞ்சியமாக நூலகத்தினைப் பயன்படுத்துவோர் தொகை அதிகமாகக் காணப்பட்டது. இதனால் வாசிப்புத்திறன், கிரகித்தல், கேட்டல், மனனம் செய்தல் என்பவற்றின் ஊடாகவே உடல், உள விருத்தி மேம்பாடு உடையதாக விளங்கியது. இக்கால கட்டங்களில் தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்ட வகையில் இருந்தாலும் உடல் உள வளர்ச்சி புத்தகப் பயன்பாட்டின் ஊடே மேம்பட்ட வகையில் இருந்தது.

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற ஆன்றோர் கூற்று குருகுலக் கல்வியில் இருந்து நவீனத்துவத்திற்கு முற்பட்ட காலம்வரை ஆசிரியர் மாணவர்களுக்கு இடையிலான இடைவினை என்பது சுமூகமாக இருந்தது. ஆனால் நவீனத்துவம் உலகமயகாக்கலின் விளைவுகளினால் ஆசிரியர் இன்றியே ஒரு மாணவன் கல்வி கற்கக் கூடியதாகவும் இயந்திரங்களின் ஊடாக மாணவர்களிற்கு இடையிலான உறவு மேம்பட்ட பொழுது ஆசிரியர் மாணவர் உறவு என்பது விரிசல் அடைந்துள்ளது. பெரும்பாலான ஆசிரியர்களதும் மாணவர்களதும் உளம் இயந்திரமாக இறுகிப் போனதாகவே காணக்கூடியதாக உள்ளது. இவர்கள் கல்வியில் பல்துறை ரீதியாக சாதனை செய்தாலும் இறுகிய மனம் படைத்தவர்களாகவும் மனித நேயத்தினை குழி தோண்டிப் புதைப்பவர்களாகவும் தான் கற்ற கல்வியினை பணம் சம்பாதிப்பதற்கும் 'நான்', 'எனது' என்ற சுயநலத்திற்காகவுமே பயன்படுத்துபவர்களாக உள்ளனர்.

இன்றைய சூழ்நிலையில் தொழில்நுட்ப வளர்ச்சி, கணனிமயமாக்கல், கற்றற் செயற்பாட்டினை இலகுபடுத்தியிருந்தாலும் பல்தகமை உடைய கல்வியறிவினை பெறக் கூடியதாக பெருமளவிலான பணத்தினை சம்பாதித்து நிறைவான வாழ்க்கையினை வாழக்கூடியதாக இருந்தாலும் அவர்களால் நீண்ட காலம் உடல், உள ஆரோக்கியமாக இருக்க முடிவதில்லை. பரபரப்பான சூழல், இயந்திரமயமான வேலைப்பளு, சமூகப்பங்குபற்றல் இன்மை, உடற்பாதிப்புக்கள் (கண் பார்வை குறைபாடு, முள்ளந்தண்டு வடப்பாதிப்பு, உயர்குருதி அமுக்கம்) ஏற்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கால கட்டங்களில் பாடசாலை இடைவிலகல், இளவயதுத் திருமணங்கள், சிறுவர் துஸ்பிரயோகம், போதைப் பொருள்பாவனை, களவு, வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்கு போர்ச்சூழல், வறுமை என்பன அடிப்படைக் காரணங்களாக காட்டப்பட்டாலும் குடும்ப மட்டத்தில் இருந்தே இவை ஆரம்பிக்கின்றன. ஆரோக்கியமான குடும்ப சூழலிலும் சமூகத்துடனான இடைவினை, ஆன்மீக ரீதியான பங்குபற்றலுடன் வளரும் குழந்தையானது விகிதாசார அடிப்படையில் பெரும்பான்மையாக சமூகப்பிறள்வான நடத்தைகளில் ஈடுபடுவது குறைவாக காணப்படுகின்றது.

தற்போது பண்டைய கல்வி முறைகளிற்கு எதிர்கால சந்ததியினரை ஒரு பகுதியளவிலேனும் தயார்ப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு அனைவரும் தள்ளப்பட்டுள்ளோம். குறிப்பாக பஜனை, அறநெறி வகுப்புக்கள், பண்ணிசை, அரங்கக் கலைகள் போன்ற துறைகளில் வாரத்தில் ஒரு நாளாவது அவர்களைத் தயார்ப்படுத்துதலின் ஊடாகவே பிள்ளைகளின் மனங்களிலே புத்துணர்வினையும் புரிந்துணர்வினையும் மன அமைதியினையும் ஏற்படுத்தலாம்.

'வாசிப்பதினால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்' என்ற கூற்றிற்கு இணங்க பிள்ளைகளினை வாசிப்பதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். பெற்றோர், உறவினர்கள் பிள்ளைகளின் அறிவைத் தூண்டக்கூடிய வகையிலான புத்தகங்களினை அன்பளிப்பாக வழங்கும் சந்தர்ப்பங்களில் அவர்களது அறிவு வளரும். பாடசாலை மட்டத்திலும் மாணவர்கள் நூலகம் செல்வதற்கும் வாசிப்பு திறனை வளர்க்கவும் ஆவன செய்தல் வேண்டும். அத்துடன் கிராமிய மட்டங்களிலும் நூலகங்களினை அனைத்து பிள்ளைகளும் பயன் பெறும் வகையில் அமைத்து கல்வியறிவை வளர்க்க வேண்டும். ஒரு தனி நபரினில் ஏற்படும் மாற்றமானது சமூகமயமாக்கலின் ஊடாக குடும்பமட்டம், பாடசாலை மட்டம், சமூகமட்டம், தேசியமட்டம் என பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தும். இதனால் மனிதநேயம், இனங்களுக்கிடையேயான நல்லுறவு, நாட்டின் சமாதானம் என்பன ஏற்பட்டு நாடும் வீடும் சுபீட்சம் பெற்ற ஒரு வளமான எதிர்கால பூரணத்துவத்தினை அடையக் கூடியதாக இருக்கும். ஒரு கிராமத்தில் ஏற்படும் வளர்ச்சியானது நாட்டினையே வளம்மிக்க தேசமாக மாற்றும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**திருமதி. தவேந்திரன் மதுரா**
**வலி வடக்கு பிரதேசசபை, மல்லாகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேசம் சார்வெளியீடுகளான நூல்கள், சிறப்பு மலர்களை ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியமும் அளவெட்டிப் பிரதேசம் சார்ந்த சில வெளியீடுகளும்.

இன்றைய எமது தமிழ்ச்சூழலில் ஆவணப்படுத்துதல் என்பது மிகவும் முக்கியமானதும் அவசியமானதுமான விடயமாக ஆகிவிட்டிருக்கின்றது. இன்றைய நிலையில் நாம் சகலவற்றையும் எழுத்துக்களாக ஆவணப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். கடந்த காலத்தின் பலவிடயங்கள் எழுத்தின் வழி நூல்களாக ஆவணப்படுத்தப்பட்டிருந்தாலும் அவற்றில் பலவற்றை நாம் இழந்து விட்டோம். எனவே ஒரு நூலின் இழப்பென்பது எமக்கு பேரிழப்பாக அமையும். ஆகவே ஏற்கனவே எழுத்தப்பட்ட நூல்களை பேண வேண்டியதும் ஆவணப்படுத்த வேண்டியதும் அவசியமாகும். அந்த வகையில் நூல்களின் ஆவணப்படுத்துகை எனும் வரிசையில் தமிழ் மொழி மூலமாக வெளியிடப்படும் ஒவ்வொரு பிரதேசம் சார்ந்த வெளியீடுகளான நூல்கள், சிறப்பு மலர்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஏனெனில் அவை அப்பிரதேசத்தைச் சார்ந்த பல அறிஞர்கள் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆர்வலர்கள் போன்றோரின் பல கனதியான பயனுள்ள படைப்புக்களை குறிப்பாக ஆய்வுக்கட்டுரைகள், கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றைத் தாங்கி வெளிவருகின்றன. இவற்றின் மூலம் ஒரு பிரதேசத்தின் வரலாறு பாரம்பரியம், கலாசாரம், வழக்காறுகள் போன்றவற்றை அறிந்துகொள்ள முடிவதோடு பல கல்வியாளர்களுக்கும் உதவும் பெறுமதி வாய்ந்த தகவல் மூலங்களாகவும் இருக்கின்றன.

குறிப்பாக சிறப்பு மலர்கள் எனும் போது அவை கோயில்கள் சார்ந்து வெளியிடப்படும் கும்பாபிசேக மலர்களாக, தேரோட்ட மலர்களாக ஆலயங்களின் விசேட நிகழ்வுகளின் தொகுப்பு மலர்களாக அமைகின்றன. பாடசாலைகள் வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து ஆண்டு மலர்களாக அனேகமாக வெள்ளி விழா, பொன்விழா,
புவளவிழா நூற்றாண்டு மலர்களாக வெளியிடுகின்றன. அதே போன்று பல்வேறு நிறுவனங்கள் தமது நிறுவனம் சார்ந்த தொகுப்புக்களை மலர்களாக வெளியிடுகின்றன. பிரதேசத்தைச் சார்ந்த பெரியோர்கள், கலைஞர்களின் கௌரவிப்பு விழா மலர்களும் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் அளவெட்டிப் பிரதேசம் சார்ந்த சில வெளியீடுகளையும் சிறப்பு மலர்களையும் பார்ப்போம். இவை அளவெட்டிப் பிரதேசத்தின் கோவில்கள் சார்ந்தோ, பாடசாலைகள் சார்ந்தோ நிறுவனங்கள் சார்ந்தோ அளவெட்டிப்பிரதேச கலைஞர்களின் கௌரவிப்பு மலர்களாகவோ அமைகின்றன. இவற்றுள் சில நூல்களே நூலகங்களில் இருக்கின்றன. ஏனையவை நூலாசிரியர்களிடமும் வெளியீட்டாளர்களிடமும் தனிப்பட்ட சேகரிப்பாளர்களிடமும் உள்ளன. சில நூல்கள் கிடைத்தற்கரியவையாகி விட்டன. அளவெட்டிப்பிரதேச வெளியீடுகளில் பூச்செளியும் பொன்னொச்சி மரம், வேர் ஊன்றி விழுது பரப்பும் ஆலமரம் ஆகிய இரண்டு நூல்களும் மிகவும் ஊன்றிக் கவனிக்கத்தக்கவையாக அமைகின்றன. ஏனெனில் இவை அளவெட்டிப் பிரதேசம் பற்றி பல விடயங்களைத் தருகின்றன.

## (அ) கோவில்கள் சார்ந்த வெளியீடுகள்

### 1) அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோவில் மலர்கள்

- **அளவையம்பதி கும்பழாவளை விநாயகர் நான் மணிமாலை (1986)**

  அளவெட்டி சைவவாலிபர் சங்கத்தால் சித்திரை 1986இல் வெளியீடு செய்யப்பட்ட இந்நூலில் பல அறிஞர்களின் வாழ்த்துப்பாக்களுடன் ஆசிரியர் வை.க.சிற்றம்பலம் அவர்கள் கும்பழாவளை விநாயகர் மீது பாடிய பலவகை விருத்தப்பாக்களால் அமைந்த நான்மணிமாலை இடம் பெற்றுள்ளது.

- **அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோவில் கும்பாபிசேக சிறப்பு மலர் (2002)**

  கோயில் பரிபாலன சபையினரால் 21.03.2002 இல் வெளியீடு செய்யப்பட்ட இம்மலரில் பல சமயபெரியார்களின் ஆசிச்செய்தியுடன் கும்பழாவளை விநாயகர் திருத்தல வரலாறு இடம் பெற்றுள்ளது. விநாயக வழிபாடு, பிள்ளையார் பெருமையும் வழிபாடும் எனது அனுபவத்திற்கண்ட கும்பழாவளையான் அற்புதங்கள், வல்லபை கணபதியின் வடிவம், விநாயகரின் தோற்றப்பின்னணி, பிள்ளையார் வகைகள், பிறநாடுகளில் விநாயகர் வணக்கம் என பல்வேறு தலைப்புக்களில் விநாயகர் பற்றி பல கட்டுரைகள், அறிஞர் புலவர் பெருமக்களால் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் ஆலய கும்பாபிசேக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள் ஆலயத் திருப்பணி நிகழ்வுகள், ஆலயத்தின் தோற்றம், ஆலயத்தைச் சூழவுள்ள கட்டடங்கள், கேணி என்பன புகைப்படங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் கும்பழாவளை விநாயகர் பேரில் எழுந்த பாமாலைகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

❖ **அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவில் தலவரலாறு (2002)**

திருமதி.கல்யாணி லோகநாதன் அவர்கள் வைகாசி 2002 ஆம் ஆண்டு ஆக்கியளித்த இந்நூலில் ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தியுடன் விநாயக வணக்கம் மகத்துவம், விநாயக வணக்கத்தின் பழமையும் முதன்மையும், அளவெட்டியில் விநாயகவணக்கம், தலவரலாறு எனும் பகுதியில் ஆலயத்தின் தலவரலாறு உட்பட ஆலயத்தின் பல விடயங்களும் ஆலயத்தைச்சூழ நடைபெற்ற பல சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தின் புகைப்படங்கள் சிலவும் ஆங்காங்கே நூலில் இடம் பெற்றுள்ளதுடன் கும்பழாவளை விநாயகரின் தோத்திரப்பாமாலைகளும் உள்ளன.

❖ **அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோயில் தொண்டர்சபை வைரவிழா சிறப்பு மலர் (2017)**

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோயில் தொண்டர்சபை ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டு நிறைவாக தொண்டர் சபையினால் 2017 இல் வெளியீடு செய்யப்பட்ட இம்மலரில் சமயப் பெரியார்களின் ஆசிச்செய்தி, தர்மகர்த்தா சபையினர், தொண்டர் சபையினரின் உருவாக்கம், செயற்பாடு அவர்களின் ஆலயப்பணிகள் பற்றிய பல குறிப்புக்கள் கட்டுரைகளாக இடம் பெற்றுள்ளன. ஆதனைவிட அறிஞர்கள் ஆர்வலர்கள் பலரின் சமயம் சார்ந்த கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. திருவிழாக்காலத்தில் தொண்டர் சபையினரின் கடந்த கால செயற்பாடுகள், திருவிழாக்கால நிகழ்வுகள் ஆலயத்தைச் சூழவுள்ள மடங்கள், கட்டடங்கள் என்பன புகைப்படங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் வெளியீடுகள்

❖ **அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் மகாகும்பாபிசேக மலர் (1990)**

அம்பிகைதாசன் அவர்களை தொகுப்பாசிரியராகக் கொண்டு பரிபாலனசபை வெளியீடாக 31.01.1990 இல் வெளியிடப்பட்ட மலரில் ஆலய தலவரலாறு இடம் பெற்றுள்ளதோடு உலகெங்கும் மாரி என்ற சக்தியின் நாமம் தூங்குகின்றது, பெருஞ்சாந்தி விழா, சிவஞான போதத்திற்கு முன் சைவசித்தாந்தம் அன்னையின் அருளும் வடிவம், மாரி அம்மன் வழிபாடு, பண்டைய ஈழத்தில் சக்தி வழிபாடு போன்ற பல்வேறு தலைப்புக்களில் யாழ் பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்களின் பல பயனுள்ள கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கோயில் மூலஸ்தான தூபி அமைப்பு உற்சவமூர்த்தி உட்பட ஆலய பரிவார சந்நிதிகளின் புகைப்படங்களும் உள்ளன. அம்மாள் பேரில் உள்ள பதிகங்கள், ஊஞ்சல் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

❖ **அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் தேரோட்ட விழா மலர் (2005)**

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் பரிபாலனசபை திருப்பணிச்சபை வெளியீடாக அளவெட்டி வடக்கு முத்துமாரி அம்மன் கோயில் திராவிடமுக பத்திர எண்கோண வடிவ புதிய சித்திரத்தேரோட்ட விழா மலர் எனும் பெயரில் 11.07.2005 இல் வெளியிடப்பட்ட மலரில் சிவாச்சாரியார்களின் ஆசிச்செய்தியுடன் கோயில் வரலாறு, வழக்காறுகள் பற்றி எழுதப்பட்டுள்ளதோடு கோயில்களில் நிகழ்ந்த அற்புதங்கள் ஓவியத்துடன் படக்கதைகளாக இடம் பெற்றுள்ளன. ஆலய திருவிழாக் காட்சிகள், தேர்த்திருப்பணியின் சில காட்சிகள் தேர் வெள்ளோட்ட காட்சிகள் என்பன புகைப்படங்களாக காட்சிப்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தின் அம்பாள் பேரில் பாடப்பட்ட பாமாலைகள் பதிகங்கள் என்பனவும் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயம் மகோற்சவ சிறப்பிதழ் (2016)

ஆலயங்களின் வரலாறுகள் பற்றிய ஆய்விற்கான சண்முகலிங்கம் சஜீலன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 2016 ஆம் ஆண்டு ஆலய மகோற்சவ விழாவில் வெளியீடு செய்யப்பட்டுள்ள இவ்விதழில் ஆலய வரலாறு நிகழ்ந்த அற்புதங்கள் என்பன தொகுக்கப்பட்டுள்ளதோடு ஆலய வரலாறும் நிகழ்ந்த அற்புதங்களும் சித்திரக்கதைகளாக இடம் பெற்றுள்ளன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள மாரி அம்மன் கோயில்கள் பற்றி விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் பேரில் எழுந்த பாமாலைகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## (ஆ) பாடசாலை சார்ந்த சிறப்பு மலர்கள்

### 01. அளவெட்டி அருணோதயக்கல்லூரி வெளியீடுகள்

❖ **பூச்சொரியும் பொன்னொச்சி மரம் (2000)**

அளவெட்டி அருணோதயக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா வெளியீடு செய்துள்ள இந்நூல் அளவெட்டிப் பிரதேசம் சார்ந்த வெளியீடுகளில் முதலாவதாகக் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய நூலாகும். இதில் ஊர் உரைத்தமை, ஊர் இழந்ததை, ஊர் நினைந்தமை, ஊர் மீண்டமை, ஊர் விளைந்தமை, ஊர் விரிந்த கதை எனும் 6 பிரிவுகளில் அளவெட்டியின் பல தகவல்களை உள்ளடக்கி ஊர் பற்றிய வரலாறு சைவ, கிறிஸ்தவ ஆலயங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் போன்றவற்றின் பல விடயங்கள் அடங்கியுள்ளன. அவற்றில் ஊர் உரைத்தமையில் எங்கள் அளவெட்டி, அளவெட்டி தந்த அறிவுச் செல்வம் அளவெட்டியூர் தட்சணாமூர்த்தி, அரை நூற்றாண்டுக்கு முன் அளவெட்டி அளவிலாப்புகளுடைய அளவையூர், கலைஞர் பலரைக்கண்ட அளவெட்டிக்கிராமத்தில் இசைக்கலை வளர்ச்சி அருணோதயக்கல்லூரி சரித்திரச்சுருக்கம் என்பன இடம் பெற்றுள்ளன. ஊர் இழந்தமை எனும் பிரிவில் அளவெட்டி இடப்பெயர்வு பாடசாலை இடம் பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கியமை என்பன பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊர் விளைந்தமையில் அளவையூர் இசையாளர்கள் கவிஞர் செல்லையா சிவப்பிரகாசம், ஓவியர் சுபாஸ்சந்திரபோஸ், பொன்னையா மாஸ்டர் போன்ற அறிஞர்கள், கலைஞர்கள் பற்றிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புக்களும் உள்ளன. ஊர் விரிந்தமையில் கனடாவில் சைவசமயம் 22 ஆம் நூற்றாண்டில் தமிழ் நிலைத்து நிற்குமா? இசையும் தமிழும் என கட்டுரைகள் அமைந்துள்ளன. இப்படைப்புக்களை அளவெட்டியைச் சேர்ந்த புலம் பெயர் படைப்பாளர்களும் இங்கு வசிக்கும் படைப்பாளர்களும் ஆக்கியுள்ளனர்.

❖ **அருணோதயக்கல்லூரி வணிக முரசு (2001)**

அருணோதயக்கல்லூரியின் கலை, வர்த்தக மாணவர் மன்றம் 2001 ஆம் ஆண்டு வெளியீடு செய்துள்ள இந்நூலில் கார்ள்பொப்பரின் திருப்திகரமான விஞ்ஞான விளக்கம் நோக்கிய பயணம் பற்றிய ஓர் மீள்நோக்கு, தமிழ்ச்சிறு கதையின் முன்னோடி, பல்தேசியக் கம்பனியும் அதன் தொழிற்பாட்டால் ஏற்படும் சாதகமான பாதகமான விளைவுகளும், பணவீக்க எண்ணக்கருக்களும் இலங்கையின் பணவீக்கப் போக்கும், கண்ணகி வழிபாடு, இலங்கையில் முருகைக்கற்பாறை அகழ்வும் அது சம்பந்தமான பிரச்சனைகளும், கலிங்கத்து பரணியில் காடு பாடியதும் என பல்வேறு தலைப்புக்களில் வர்த்தகம், கலை சம்பந்தப்பட்ட கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

❖ **அருணோதயம் (2008)**

யாழ் அருணோதயக்கல்லூரி அளவெட்டி 2008 இல் வெளியீடு செய்த இம்மலரில் பல்வேறு வாழ்த்துச் செய்திகளுடன் 5 இயல்களில் கல்லூரியினது பதிவுகள் இணைபாடவிதானச் செயற்பாடுகள், அறிஞர்களது படைப்புக்கள் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களது படைப்புக்கள் என உள்ளன. இயல் 1 இல் அருணோதயக்கல்லூரியின் கடந்த கால வளர்ச்சி பற்றியும் இயல் 2 இல் பல்வேறு இணைபாடவிதானச் செயற்பாட்டின் மன்றங்களின் செயற்பாடு பற்றி கூறப்பட்டுள்ளது. இயல் 3 இல் அளவெட்டி அன்றும் இன்றும், கல்விச் சீர்மியமும் பன்முக நுண்மதியும், வன்முறையற்ற தொடர்பாடல் என பல்வேறு அறிஞர்களின் படைப்புக்கள் உள்ளன. அத்துடன் பாடசாலை ஆசிரியர்களின் படைப்பாக இலங்கைத் தமிழர் வரலாறும் அரச உருவாக்கமும், நூல்களின் தோற்றமும் வளர்ச்சியும் என பல சமய இலக்கிய கட்டுரைகள் உள்ளன. இயல் 5 இல் மாணவர்களின் சிறு படைப்புக்களும் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. மல்லாகப் பிரதேச பாடசாலை வெளியீடுகள்

❖ சிறப்பு மலர் (2007)

யாழ் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் 175 ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலராக 2007ஆம் ஆண்டு வெளியீடு செய்துள்ள இம்மலரில் பல்வேறு ஆசிச்செய்தி வாழ்த்துச் செய்திகளுடன் கல்வியின் நோக்கமும் சமுதாயத் தொண்டும் எனும் தலைப்பில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் கட்டுரை இடம் பெற்றுள்ளது. அத்துடன் ஆரம்பக்கல்வித்துறையை எமது பிரதேசத்தில் வளர்ச்சியுறச் செய்வதற்கான பிரயோகங்கள், கலைத்திட்டச் செயற்பாட்டின் ஊடாக மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்த்தெடுக்கலாம், பாடசாலைகளில் நூலகங்களின் பயன்பாடு, மல்லாகம்கனிஷ்ட வித்தியாலய கலைமகள் முன்பள்ளியின் தோற்றமும் வளர்ச்சியும்போன்ற பல்வேறு தலைப்புக்களில் பாடசாலை ஆசிரியர்களின் கட்டுரைகளும் மாணவர்களின் ஆக்கங்களும் இடம் பெற்றுள்ளன.

❖ 150 வது ஆண்டு நினைவு மலர் (2010)

யாழ் மல்லாகம் மகா வித்தியாலயம் பாடசாலையின் 150 ஆவது ஆண்டு நிறைவு மலராக 2010 இல் வெளியீடு செய்த மலரில் ஆசியுரை வாழ்த்துரையுடன் வித்தியாலய அன்னையின் பாதச்சுவடுகள் எனும் தலைப்பில் பாடசாலையின் பல விடயங்கள் பற்றி கூறப்பட்டுள்ளன. கல்வியாளர்களின் படைப்புக்கள் எனும் தலைப்பில் அறிஞர்களின் பல பயனுள்ள கட்டுரைகள் உள்ளன. பாடசாலை ஆசிரியர்களின் படைப்புக்கள் எனும் பகுதியில் மல்லாகம் கிராமம், ஐரோப்பியக்கலை வரலாற்றில் கிறிஸ்தவர்களின் செல்வாக்கு, கல்வியின் நோக்கங்களும் தன்மைகளும், பாடசாலையும் தொழில்நுட்பக் கல்வியும் என பல்வேறு ஆக்கங்கள் உள்ளன. மாணவர்களின் பல படைப்புக்களும் உள்ளன. பாடசாலையின் பல்வேறு நிகழ்வுகள் புகைப்படங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பிரதேசம் சார்ந்த பெரியோர்களின் கௌரவிப்பு மலர்கள்

❖ மல்லாகம் கிராம அபிவிருத்தியின் நாற்பதாண்டு விழாவும் அதன் தலைவர் திரு.சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் வைரவிழாவும் சிறப்பு மலர் (1993)

இம்மலரில் பல்வேறு பெரியார்களின் ஆசிச்செய்திகள் வாழ்த்துச் செய்திகளுடன் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் பதவி நிலையில் உள்ளவர்களது புகைப்படங்கள், கிராம அபிவிருத்திச்சங்கத்தின் பல்வேறு நிகழ்வுகளின் புகைப்படங்கள் என்பன இடம் பெற்றுள்ளன. மல்லாகம் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் என்பவற்றின் விபரங்களும் இடம் பெற்றுள்ளன. இறுதி அத்தியாயத்தில் திரு சு.பாஸ்கரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு இடம் பெற்றுள்ளது.

❖ அருட்கவி அமுது (2005)

அருட்கவி சி.விநாசித்தம்பி புலவர் அவர்களின் சமாதியை முன்னிட்டு 2005 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இம்மலரில் என்கதை எனும் தலைப்பில் சி.விநாசித்தம்பி புலவர் அவர்களால் எழுதப்பட்ட சுயசரிதை இடம் பெற்றுள்ளது. இவை தவிர ஆன்மீகப் பெரியவர்களின் பிரார்த்தனை உரைகள், புலவர்களின் அஞ்சலி, கவிதாஞ்சலி, குடும்ப உறுப்பினர்களின் நினைவஞ்சலி ஆகிய தலைப்புக்களில் அஞ்சலி உரைகள் இடம் பெற்றுள்ளன. பல்வேறு கால கட்டங்களில் எடுக்கப்பட்ட அவரது புகைப்படங்களும் உள்ளன. அத்துடன் அருட்கவி அவர்களால் இயற்றப்பட்ட ஸ்ரீசெல்வச்சந்நிதிக்கந்தன் திருத்தலபுராணம், ஸ்ரீநாகவரதநாராயணர் பிள்ளைத்தமிழ் ஆகிய பாமாலைகளும் இடம் பெற்றுள்ளன.

❖ வேர் ஊன்றி விழுது பரப்பும் ஆலமரம் (2011)

அளவெட்டிக் கிராமம் பற்றிய வரலாற்றுத் தொகுப்பாக பண்டிதர் நாகலிங்கம் அவர்களை தொகுப்பாசிரியராகக் கொண்டு அளவெட்டி சைவ மகாஜனசபையால் வைகாசி 2011 இல் வெளியீடு செய்யப்பட்ட இம்மலரில் பல முக்கியஸ்தர்களின் வாழ்த்துச் செய்திகளுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டிக் கிராமம் பற்றிய பல விடயங்கள் உள்ளன. அளவெட்டியைச் சேர்ந்த பல அறிஞர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், பல்துறைக்கலைஞர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் பற்றிய பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அளவெட்டிக் கிராமத்தின் சங்கங்கள், அமைப்புக்கள், கழகங்கள் பற்றிய தகவல்களும் அளவெட்டிப் பிரதேச ஆலயங்களின் விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் தவிர வேறும் பல நூல்கள் அளவெட்டிப் பிரதேசம் சார்ந்து வெளியிடப்பட்டிருக்கலாம். எனினும் இங்கு பார்வைக்கு கிடைத்த நூல்களின் விபரங்களே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

சண்முகலிங்கம் சஜீலன்
பன்னாலை, தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வடக்கு பிரதேசப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஓர் அறிமுகப்பதிவு

19ஆம் நூற்றாண்டிலே இலங்கையில் அறிமுகமாகிய பத்திரிகைத்துறையினூடாகப் பெரும் இலக்கிய பங்களிப்பை வலிகாமம் வடக்குப் பிரதேசம் ஆற்றியுள்ளது. இரண்டு நூற்றாண்டுகளில் இப்பிரதேசத்தில் வெளியாகிய, இப்பிரதேசத்தவர்களால் வேறு இடங்களிலிருந்து வெளியிட்ட,இணைந்து உருவாக்கிய எத்தனையோ பத்திரிகைகள்,சஞ்சிகைகளின் பிரதிகளைப் பல்வேறு காரணங்களால் இன்று பார்க்க முடியாமல் போய்விட்டது. இவ் ஏடுகளின் சில பிரதிகளை இலங்கை தேசிய சுவடிச் சாலையிலும் சில தனிப்பட்ட சேகரிப்புகளிலும் பல்கலைக்கழக நூலகங்களிலும் காணமுடிந்தாலும் முழுமையான சேகரிப்புக்களைப் பெறுதல் சாத்தியமல்ல. எனவே அவை பற்றிக் கிடைத்த தகவல்களை ஏற்கனவே இத்துறையில் ஆய்வு நோக்கில் அணுகி நூல்களாக உருவாக்கிய அறிஞர்களின் துணையோடு மீளச் சிந்திப்பதற்கான ஒரு நோக்கில் இவ்வறிமுகக் கட்டுரை அமைகின்றது. மேலும் கடந்தவை போக தற்காலத்தில் வெளிவரும் பத்திரிகைகள் சஞ்சிகைகளையாகிலும் ஓரிடத்தில் இல்லாது பல்வேறு பிரதேசம் சார்ந்தும் சேகரித்தும் ஆவணப்படுத்தியும் வைப்பதற்கான முன்முயற்சிகளை நூலகங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான புரிதலைக் கவனப்படுத்துவது அடுத்த நோக்கமாகும். இச் சமூகக் கடமை நிறுவனம் சார்ந்தோ தனிநபர்கள் சார்ந்தோ அன்றிக் கூட்டமாகவோ ஆற்றப்படல் அவசியமாகும்.

*சுதேசநாட்டியம்*

"தற்போதைய உலகத்தை பத்திரிகையுகமெனல் பொருந்தும். மேல்நாடுகள் பத்திரிகைகளாலேயே முன்னேற்றம் அடைந்தன. கீழ் நாடுகளோ பத்திரிகை விடயத்தில் கவனம் செலுத்துவதைக் காணோம். எமது யாழ்ப்பாண நாட்டிலே தமிழருக்கென தோன்றிய பத்திரிகைகள் பல. அவற்றுள் சில ஆதரவு கிடைக்காமையால் அழிந்தொழிந்து போக எஞ்சியிருப்பவை மிகச் சிலவே. அவையும் ஆதரவின்மை எனும் நோயாற் பீடிக்கப்பட்டு ஒருவாறு உயிருடன் இருந்து வருகின்றன. எமது நாட்டில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் பெரும்பாலும் சாதாரண அறிவுபடைத்தவர்களாலேயே ஆதரிக்கப்பட்டு வருகின்றன."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கல்லடி வேலுப்பிள்ளை, சுதேச நாட்டியம் பத்திரிகை (16.11.1932 இதழில்)*

இது 20ம் நூற்றாண்டில் வெளிவந்த முக்கிய பத்திரிகையாகும். "சுதேசநாட்டியம்" என்ற வீராவேசமும் சுதந்திர உணர்வும் ஆக்க இலக்கிய திறனும் கொண்டு வலிகாமம் வசாவிளான் பகுதியிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளில் ஒரு செய்தியாகும். அதில் குறிப்பிட்டவை அன்று மட்டுமல்ல இன்றும் தொடர்கின்றதே என்பதை உணர்க.

இலங்கையில் புகழ் பெற்ற தமிழறிஞர்களுள் கவிதை, உரைநடை பத்திரிகைக் கண்டனம், கட்டுரை வரலாறு, ஆராய்ச்சி எனப் பல துறைகளிலும் ஆக்கங்களைத் தந்து சிறப்பிடம் பெற்றவர் சுதேசநாட்டிய பத்திரிகையின் ஸ்தாபகரும் அதன் ஆசிரியருமாக விளங்கிய ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களே. யாழ்ப்பாண சரித்திரத்தைப்பற்றி ஆராயும் எவருக்கும் இவரால் எழுதப்பட்ட **யாழ்ப்பாண வைபவகௌமுதி** என்னும் நூலின் அருமை நன்கு விளங்கும்.15.09.1902 தொடக்கம் சுதேசநாட்டியம் என்ற பெயரிலமைந்த தனது சரித்திர கீர்த்திமிக்க இப்பத்திரிகையைத் தொடங்கினார். இதன் முதல் ஆசிரியரும் இவரே.இடையில் 1910 ம் ஆண்டில் திரு.இரா.நல்லதம்பி ஆசிரியராக கடமையாற்ற நேரிட்டது. பத்திரிகையின்

வெளியீட்டாளராக திரு.சி நல்லதம்பி கடமையாற்றினார். வசாவிளான் சாரதாபீட அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்ட இப்பத்திரிகை மாதம் இருமுறை வெளியானது. The Jaffna Native Opinion என ஆங்கிலத்தலைப்பு குறிக்கப்பட்டது. அதன்படி யாழ்ப்பாண மக்களின் எண்ணங்களை, கருத்து வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் களமாக சமூக முன்னேற்ற பணிகளை முன்னிறுத்தி உழைக்கும் தளமாக வெளிவந்தது.

அக்காலப்பகுதிப் பத்திரிகைகள் சமயப்பிரசாரத்திற்கு முன்னுரிமையளித்து வெளியான ஒரு சூழ்நிலையில் சமூக நோக்கில் வெளிவந்த முக்கிய பத்திரிகையாக இது ஆய்வாளர்களால் கணிக்கப்படுகின்றது. மதுவிலக்கு பிரசாரம், சீதனத்தின் கேடு போன்ற சமூகப்பிரச்சனைகளையிட்டு குரலெழுப்பியது. படித்த மத்திய தரவர்க்கம் ஒன்று உருவாகி வந்த அக்காலச் சூழ்நிலையில் பல துறை சார்ந்த வாசிப்பு பழக்கத்தை சுதேசநாட்டியம் வளர்க்க தலைப்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரு சந்திரோதயம்**

இப்பத்திரிகை 1908 ஆம் ஆண்டிலிருந்து வசாவிளான் ஸ்ரீ சாரதா பீட அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் முதல் ஆசிரியர்களாக பி.எம்.வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களும் சு.அ.செல்வத்துரை அவர்களும் விளங்கினார்கள். யாழ்ப்பாண மக்களின் முன்னேற்றம் கருதி வெளிவந்த பத்திரிகையாகும்.

**சைவசித்தாந்த பானு**

இப்பத்திரிகையும் 1924 ஆம் ஆண்டில் வசாவிளான் ஸ்ரீ சாரதா பீட அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியராக திரு.எஸ்.பண்டித் நடராசா அவர்கள் விளங்கினார்கள். தலைப்புக்கு ஏற்ப சைவ சமயம் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியது.சமய சீர்திருத்தக் கருத்துகளும் புராண கருத்துக்களும் இடம்பெற்றன.

**பஞ்சசக்தி**

1930ம் ஆண்டளவில் தெல்லிப்பழை பஞ்சகன்மிய பரிபாலன சபையின் வெளியீடாக யாழ்ப்பாணம் ஸ்ரீகணேச அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது. இதன் ஆசிரியர் திரு.ஆர்.எஸ்.கார்த்திகேய ஆச்சாரி. சைவசமயம் சார்ந்த விடயங்கள், தச்சுத்தொழில்,சிற்பக்கலை சம்மந்தமான விடயங்களும் இடம் பெற்றன.

**ஈழகேசரி**

குரும்பசிட்டியைச் சேர்ந்த திரு.நா.பொன்னையா அவர்களை ஆசிரியராகவும் நிறுவனராகவும் கொண்டு சுன்னாகம் திருமகள் அச்சகத்தில் அச்சிடப்பட்டு செய்திப்பத்திரிகையாகப் பதிவு பெற்றது. 22.06.1930 தொடக்கம் 28 ஆண்டுகள் வரை வெளிவந்தது. ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தது.

**தமிழன்**

சுதேசநாட்டிய ஸ்தாபகர் கல்லடி வேலுப்பிள்ளையின் மூன்றாவது புத்திரனான திரு.வே.சாரங்கபாணி அவர்களால் 1926ம் ஆண்டளவில் வெளியிடப்பட்ட பத்திரிகையாகும். ஈழத்தின் தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோடியாக விளங்கியவரும் தமிழ்,ஆங்கில மொழிகளில் அற்புதமான ஆற்றலை பெற்றவருமான திரு.சாரங்கபாணியின் இப்பத்திரிகையின் பிரதிகள் காணக்கிடைக்கவில்லை.

**கலைஞானி**

கலைஞானி என்னும் அடைமொழியால் அழைக்கப்படும் திரு.அ.செல்வரத்தினம் அவர்களை ஆசிரியராகவும் ஸ்தாபகராகவும் கொண்டு 1947 முதல் குரும்பசிட்டியிலிருந்து வெளியான சஞ்சிகையாகும். ஈழத்தமிழர் வரலாற்றை தேடற்கரிய ஆவணங்களாக, அரும்பொருட்களாக, தொல்லியற்சின்னங்களாகத் திரட்டி பெரும்பொக்கிசமாகப் பேணிவந்த கலைஞானி கலை, இலக்கியம், வரலாறு, தொல்பொருட்துறை சார்ந்த ஆக்கங்களுடன் இச்சஞ்சிகையை வெளியிட்டு வந்தார்.

**தமிழ்மணி**

தெல்லிப்பழையிலிருந்து 1949ம் ஆண்டிலிருந்து வெளிவந்த சஞ்சிகையாகும். இதன் ஆசிரியர் தெல்லியூர் செ.நடராசா அவர்களாவார். இவர் தமிழ் இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் மிக்க புலமையுடையவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் வல்லுனர். வீரகேசரி பத்திரிகை துணை ஆசிரியராகவும் சுதந்திரன் இணை ஆசிரியராகவும் இந்துசாதனம் பத்திரிகை ஆசிரியர் குழுவிலும் இடம் பெற்றவர். இவர் மேலும் **யாழ்பாடி,ஜோதிடம்,இளைஞன்,வெள்ளியரங்கம்** என்னும் தலைப்புக்களிலும் சஞ்சிகைகள் வெளியிட்டதாக அறிய முடிகின்றது.

**வெற்றிமணி**

இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த சிறுவர் மாத இதழ் என்ற பெருமைக்குரிய இச்சஞ்சிகை 1950ம் ஆண்டில் குரும்பசிட்டியில் உருவாகியது.இதன் ஸ்தாபகரும் ஆசிரியருமாக விளங்கியவர் புகழ்பூத்த அதிபராக விளங்கிய திரு.மு.க.சுப்பிரமணியம் அவர்களாவார். பல படைப்பாளிகளை, ஓவியர்களை உருவாக்கியவர். இச்சஞ்சிகை 25 வருடங்களாக வெளிவந்தது. யுத்தசூழ்நிலைமைகளால் நின்று பின்னர் இவரது மகன் ஓவியக்கலைவேள் க.சு.சிவகுமாரன் அவர்களால் ஜேர்மன் நாட்டிலிருந்து வெளியிடப்படுகின்றது. சிவகுமாரனை ஆசிரியராகக் கொண்டு **சிவத்தமிழ்** என்னும் ஆன்மீக இதழும் ஜேர்மனியில் வெளியிடப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிலம்பொலி**

இது ஒரு இலக்கிய மாத இதழ். 1970களில் தெல்லிப்பழையிலிருந்து ஆசிரியர் பழையூர் சுந்தரம்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது.

**வைகறை**

கல்லடிவேலுப்பிள்ளையின் பேரன் சிலோன் விஜயேந்திரனை ஆசிரியராகக் கொண்டு மல்லாகத்திலிருந்து வெளிவந்த முத்திங்கள் இதழ்.

**நுதா**

குரும்பசிட்டியிலிருந்து மன்மதராஜனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மாதமிருமுறை இதழாகும்.

**இசையாளன்**

மாவிட்டபுரத்திலிருந்து வெளியாகியது. 1972ம் ஆண்டிலிருந்து வெளியான சஞ்சிகை. இதன் ஆசிரியர் கலாபூசணம் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் ஆவார்.

**அமுதா**

1973 முதல் காங்கேசன்துறையிலிருந்து திரு.க.குணரத்தினத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இலக்கிய இதழாகும்.

**உலகத் தமிழர் குரல்**

1974ம் ஆண்டு முதல் ஆவணஞானி குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்களால் கண்டியில் நிறுவப்பட்ட உலகத்தமிழ்ப் பண்பாட்டுஇயக்கம் சார்பாக வெளியிடப்பட்டது.

**இளைஞர் குரல்**

1978ல் தெல்லிப்பழையிலிருந்து வெளிவந்த அரசியல் சார்புப் பத்திரிகை. இதன் ஆசிரியர் சொ.யோகநாதன். தமிழர் இளைஞர் பேரவை சார்பாக வெளியிடப்பட்டது.

**அன்னை**

புகழ்பூத்த எழுத்தாளர் அநு.வை.நாகராஜன் அவர்கள் வெளியிட்ட சஞ்சிகை. இலக்கிய முத்திங்கள் இதழாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி

பண்டிதர் சீ.அப்புத்துரை அவர்கள் மயிலங்கூடல் இளவாலையிலிருந்து வெளியிட்ட சஞ்சிகையாகும்.

**அருள் ஒளி**

2002ம் ஆண்டுமுதல் தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான வெளியீடாக வெளிவரும் ஆன்மிக சஞ்சிகையாகும். இதன் ஸ்தாபகர் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா ஆவார். சஞ்சிகை ஆசிரியராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களும் உதவி ஆசிரியராக சிவத்திரு கா.சிவபாலன் அவர்களும் பணியாற்றுகின்றனர். சுன்னாகம் திருமகள் அச்சகம் தேவஸ்தான அச்சகமாக இயங்கும் சூழ்நிலையில் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" எனும் கருத்தோடு இச்சஞ்சிகை வெளிவருகின்றது. இதுவரை 110 இதழ்கள் வரை வெளிவந்துள்ளன.

**இனி குறிப்பாக அளவெட்டி கிராமத்தவரின் பத்திரிகை,சஞ்சிகைப் பணிகளை நோக்குமிடத்து,**

**கலாநிதி (தமிழாராய்ச்சி,மும்மாத இதழ் 1942)**

**சுவதர்மபோதம் (சைவசமய மும்மாத இதழ் 1945)**

இவ்விதழ்களின் ஆசிரியராகவும் ஸ்தாபகராகவும் விளங்கியவர் முகாந்திரம் பிரம்மஸ்ரீ தி.சதாசிவ ஐயர் ஆவார்.அளவெட்டி தெற்கு பெருமாக்கடவையில் 1882ல் தோன்றிய இவர் கல்வி அதிகாரியாகப் பணியாற்றியவர். இவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆரிய திராவிட அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக **கலாநிதி** என்னும் தமிழ்மொழி ஆய்வுச்சஞ்சிகை 1942ல் வெளியிடப்பட்டது. இச் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இவருடன் கலாநிதி சு.நடேசப்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, திரு.வே.நாகலிங்கம்,

பிரம்மஸ்ரீ வை.இராமசாமி சர்மா, கல்விமான் திரு.அ.வி.மயில்வாகனம் ஆகியோர் இடம்பெற்றுத் தரமான ஆக்கங்களைத் தந்தார்கள்.

அவ்வாறே பிராமண சமாஜம் என்னும் அமைப்பு சார்பாக **சுவதர்மபோதம்** என்னும் மும்மாத சஞ்சிகை ஒன்றையும் 1945ல் வெளியிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயக்கிரியைகள் பற்றியும் சமயத் தத்துவங்கள் பற்றியும் பல்வேறு ஆக்கங்கள் தமிழ், சமஸ்கிருத மொழிகளில் இவ்விதழில் இடம்பெற்றன.

**கலைமதி**

1959ல் கந்தரோடை ஸ்கந்தவரோயக் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்களிற் பலர் ஒன்றிணைந்து வெளியிட்ட சஞ்சிகை இதுவாகும். இதன் ஆசிரியர் பொறுப்பில் புங்குடுதீவு வித்துவான் சி.ஆறுமுகம் அமர்ந்திருக்க ஆசிரியர் குழுவில் மாதகல் வ.கந்தசாமி, அளவெட்டி வ.பொன்னம்பலம், திலகவதி நடராசா, கே.சிவபாலன், க.சிவபாதசுந்தரம், இ.வே.செல்வரத்தினம், வை.கனகசபாபதி, த.சேனாதிராஜா போன்ற தமிழறிஞர்களும் கல்விமான்களும் இடம் பெற்றிருந்தார்கள்.கவிதைகள், சமயக்கட்டுரைகள், தொடர்கட்டுரைகள், துணுக்குகள், ஆய்வுக்கட்டுரைகள், அறிவியற்கட்டுரைகள், சிறுகதைகள், இளைஞர் அம்சங்கள் என பல்துறைசார்ந்த விடயங்களும் இடம்பெற்றிருந்தன.

**புதிசு**

1980களில் அளவெட்டி அருணாசலம் இரவி(அ.ரவி) இளவாலை விஜயேந்திரன் இன்னும் திரு.பாலசூரியன்,திரு.நா.சபேசன் கூட்டிணைப்பில் உருவான சஞ்சிகை. அளவெட்டி ஜெயாபிரஸ் மற்றும் பல அச்சகங்களில் அச்சிடப்பட்டது. நிர்வாக ஆசிரியராக திரு.நா.சபேசன் இயங்க ஏனையோர் ஆசிரியர் குழுவாக இயங்கினர்.

**செந்தமிழன்**

1978ம் ஆண்டளவில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறி செந்தமிழர் இயக்கம் என்னும் அரசியல் அமைப்பை உருவாக்கிய அளவெட்டி தோழர் திரு.வ.பொன்னம்பலம் ஆசிரியர் வெளியிட்ட அரசியல் சார்புப் பத்திரிகை இதுவாகும்."உழைப்பவரே உலகை ஆள்வோர்" என்னும் முதன்மை வாசகம் துலங்க உழைப்பாளர் சின்னமாகிய அரிவாளும் சுத்தியலும் ஏந்திய கைகள் புரட்சியின் நிறமான சிவப்பு நிறத்தில் ஜொலிக்க செந்தமிழன் இதழ்கள் மலர்ந்து மணம் வீசின.மாத இதழாக வெளிவந்து தமிழினத்தின் பிரச்சனைகள், அதன் அரசியல் போக்கு பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றன.(பக்கங்கள் 20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தமிழர் இயக்க போர்முரசு

இவ்விதழ் திங்கள் வெளியீடாக 1.5.1978 மேதினத்தில் வெளியாகியது. ஆசிரியர் குழுவில் அளவெட்டி வ.பொன்னம்பலம் அவர்களுடன் அச்சுவேலி மா.செல்லத்தம்பி, உருத்திரபுரம் என்.கே.தர்மலிங்கம் இணைந்திருந்தார்கள். தனிப்பிரதி ரூ.1, ஆண்டுச் சந்தா ரூ.12. இயக்கத்தின் அரசியல் குழுச் செயலாளராகிய திரு.வ.பொன்னம்பலம் சுன்னாகம் சுரபி அச்சகத்தில் அச்சிட்டுள்ளார். செந்தமிழர் இயக்க யாப்பு, செந்தமிழர் மாநாட்டு புகைப்படங்கள் என அக்கால அரசியல் நிலையைக் காட்சிப்படுத்திய இதழ்.

## ஆசிரிய போதினி

மாணவர்களுக்கு உபயோகமான பாடப்புத்தகங்களை வெளியிட்ட அளவெட்டி முகாந்திரம் தி.சதாசிவஐயர் காலத்துக்கு காலம் பத்திரிகைகளில் பல கட்டுரைகளை எழுதி வந்தார். அக்கட்டுரைகளைக் கொண்டு ஆசிரியபோதினி பத்திரிகையை வெளியிட்டார்.

## எரிமலை

மாதமிருமுறை வெளிவந்த இச்சஞ்சிகையில் அளவெட்டி அ.செ.முருகானந்தம் அவர்களும் எழுத்தாளர் தாளையடி சபாரத்தினம் அவர்களும் இணைந்து ஆசிரியர்களாகப் பணியாற்றினார்கள். 43,பெருந்தெரு, திருகோணமலை என்ற விலாசத்திலிருந்து வெளியான இதழ்.

கல்கி ஆசிரியர் திரு.கிருஸ்ணமூர்த்தி அவர்களின் அசீர்வாதத்தோடு ஆரம்பித்த எரிமலையில் திருமலைச் செய்திகள், வேறு விசேட குறிப்புகள், கடிதங்கள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், போன்ற அம்சங்கள் இடம்பெற்றன.

## புலம்

அளவெட்டி அ.ரவி அவர்களால் 1998 தையிலிருந்து 2000ஆம் ஆண்டுவரை பிரிட்டன் நாட்டில் இரு மாதங்களுக்கு ஒருமுறையாக வெளியிட்ட இலக்கிய இதழ். புலம் பெயர் படைப்பாளிகளின் படைப்புக்களை வெளியிட்ட இதன் கடைசி இதழ் ஆகஸ்ட்,செப்ரம்பர் 2000இல் வெளியானது. இதுவரை 14 இதழ்கள் வெளியாகியுள்ளன.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வெள்ளிமலை

வலிகாமம் தெற்கு பிரதேச வாசகர் வட்டத்தின் வெளியீடாக 2007 சித்திரை-ஆடி முதல் வெளியாகிய சஞ்சிகை இதுவாகும். அளவெட்டியைச் சேர்ந்த திரு.க.சௌந்தரராஜன், சுழிபுரத்தைச் சேர்ந்த திரு.ப.விஜயகுமார் ஆகியோரை இணை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்த காலாண்டு இதழ். வலிகாமம் பிரதேச எழுத்தாளர்களின் ஆக்கங்களைக் கொண்டதாகவும் பிரதேசம் சார்ந்த தகவல்கள், கட்டுரைகள், புகைப்படங்கள் கொண்டதாகவும் 12 இதழ்கள் வரை வந்து தற்பொழுது இடைவெளி எடுத்துக் கொண்டுள்ளது.

### நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ் என்ற வாசகத்துடன் **நமது ஈழநாடு** 02.10.2002 ஆரம்பமாகியது.மிகக் குறுகிய காலத்தில் அதிகளவு வாசகர்களை பெற்றுக்கொண்ட பத்திரிகையான இதில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிறப்புப் பகுதிகள் வெளியாகின. விளையாட்டு. விவசாயம். சமூகநலன்,சுகாதாரம்,மகளிர்,சிறுவர் பகுதிகள், ஆன்மீகம் என வெளியாகும் பகுதிகளுடன் இலக்கியப்படைப்புகளுக்கும் சிறப்பிடம் வழங்கி வந்தது. யாழ்ப்பாணத்தில் அசாதாரணமான கடந்த காலகட்டத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்த ஊடகத்துறையில் சிறப்பாக வெளிவந்து கொண்டிருந்த இப்பத்திரிகையின் நிர்வாக இயக்குனரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கத்தின் தலைவருமான திரு.சி.சிவமகாராஜா இனந்தெரியாத துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானதைத் தொடர்ந்து 22.08.2006ல் வெளியீட்டை நிறுத்திக் கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலக உத்தியோகத்தர்கள் அளவெட்டி




## மலர்க் குழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மேலும் சில தகவல்கள்...............................

- 1948ம் ஆண்டில் வெளியான **ஸ்ரீலங்கா** செய்திப்பத்திரிகை இலங்கை அரசாங்க தகவற் பகுதியின் அரச கொள்கை விளக்கச் சிற்றிதழாக வெளிவந்தது. இதன் ஆசிரியர் திரு.குல.சபாநாதன் அவர்களும் அளவெட்டி அ.ந.கந்தசாமி அவர்களுமாவார்கள்.
- 1955ம் ஆண்டில் மறுமலர்ச்சி எழுத்தாளர் வரதர் நடாத்திய **தேன்மொழி** என்ற கவிதைக்கான இதழில் அளவெட்டி மகாகவி உருத்திரமூர்த்தி இணை ஆசிரியராக பணிபுரிந்தார்.
- எழுத்தாளர் அ.ந.கந்தசாமி கம்யூனிஸ்ட் கட்சிப்பத்திரிகை **தேசாபிமானியிலும்** பணியாற்றியுள்ளதுடன் **சுதந்திரன், வீரகேசரி,** ஆங்கிலப் பத்திரிகையான **டிறிபியூனிலும்** பணியாற்றினார்.
- அளவெட்டி எழுத்தாளர் கை.சரவணன் **தளவாசல்** கலை இலக்கிய சமூக பண்பாட்டு காலாண்டிதழின் இணை ஆசிரியராக பணிபுரிகின்றார். இப்பொழுதும் வெளிவரும் சஞ்சிகை இதுவாகும்.
- அ.செ.முருகானந்தம் **ஈழநாடு** பத்திரிகையில் பணியாற்றியுள்ளார்.
- இந்துசமய. இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளராக இருந்த கொல்லங்கலட்டி திரு.க.சண்முகலிங்கம் 1991 பங்குனி மாதத்திலிருந்து **பண்பாடு** என்னும் பருவ இதழ் ஒன்றினை திணைக்கள வெளியீடாக வெளியிட்டார். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விமான்கள், ஆய்வாளர்கள், துறைசார் அறிஞர்கள் என பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாக எழுதிய பயனுடைய கட்டுரைகளைத் தாங்கி பண்பாடு வெளிவருகின்றது. தரமான ஆய்வுச் சஞ்சிகையாக வளர்த்தெடுத்துள்ளார். பணியிலிருந்து இவர் ஓய்வு பெற்றபோதும் பருவ இதழ் தொடர்ந்து வெளிவருகின்றது. அதேசமயம் ஓய்வின் பின் திரு.சண்முகலிங்கம் பன்முக சிந்தனைக்கான **கூடம்** என்னும் ஆய்விதழை அதன் ஆசிரியரான திரு.தெ.மதுசூதனனுடன் இணைந்து வெளியிட்டு வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

பல்வேறுபட்ட ஆக்க இலக்கிய கர்த்தாக்களைக் கொண்ட இப்பிரதேசத்தின் பல எழுத்தாளர்கள் புலம்பெயர்ந்து அவ்விடங்களில் தமது இலக்கிய பங்களிப்பினை மேற்கொள்கின்றார்கள். ஒரு சில நண்பர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இடையில் இவர்களது எழுத்து முயற்சிகள் பற்றிய தகவல்கள் இருக்கலாம். எதிர்காலத்தில் ஆய்வுகளுக்கும் தகவல்களுக்காகவும் மட்டுமன்றி வாசிப்பதற்காகவும் இழந்தவற்றை ஓரளவு மீண்டும் புலம் பெயர் இலக்கியங்களைத் திரட்டியும் ஆவணக்காப்பகம் ஒன்றினூடாக சமன் செய்ய ஆவன செய்வோமா?

## உசாத்துணை நூல்கள்


1. விஜயேந்திரன், சிலோன், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை மாவிட்புரம் 1993
2. "கோப்பாய் சிவம்" இலங்கையில் தமிழ் பத்திரிகைகள் சஞ்சிகைகள் 1841-1984 கிளிநொச்சி 1985
3. சிவகுருநாதன் இ.இலங்கையில் தமிழ்ப்புதினப்பத்திரிகைகளின் வளர்ச்சி சென்னை 1993
4. விஜயேந்திரன் இ.உலகின் மூன்றாவது கண், 2008
5. சிவநேசச்செல்வன், ஆ.ஈழத்துத் தமிழ் பத்திரிகைகள் ஓர் ஆய்வுத்தொகுப்பு 2010
6. அருள்சந்திரன், மா.கலைப்பூமி,தெல்லிப்பழை 2010
7. அப்துல்லா, றமீஸ், இலங்கைத்தமிழ் பத்திரிகைகள் 1841-1950 கொழும்பு 2012


அளவெட்டி. க. சௌந்தரராஜசர்மா
இளைப்பாறிய நூலகர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுக்கலை தோற்றமும் வளர்ச்சியும்

பதிப்பித்தல் கலையே அச்சிடலாகும். இது எழுத்துக்களையும் படங்களையும் பதிப்பிக்கப் பயன்படும் ஒரு வழி முறையாகும். பலகாலம் காகிதத்தின் மீது மையைக் கொண்டு அழுத்துவதனூடு அச்சிடலானது செய்யப்பட்டு வந்தது. தற்காலங்களில் வேறு புதிய வழிமுறைகள் பல கையாளப்பட்டு வருகின்றன. நவீன முறை அச்சிடலில் வணிக நோக்கோடு பல தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அச்சிடல் வகைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதில் எழுத்து அழுத்த முறை அச்சிடல், இம்முறையானது பரப்பிலிருந்து உயர்த்தப்பட்ட நிலையிலிருக்கும் விம்பம் மையிடப்பட்டு, அச்சிடப்பட வேண்டிய பரப்பின் (காகிதத்தின்) மீது அழுத்தத்துடன் பதிக்கப்படுகின்றது. இன்னொரு வகையான 'ஆழ் முறை அச்சிடல்' முறையானது எழுத்துக்களை குறிக்கும் விதத்தில் வெவ்வேறு ஆழங்களில் அமைக்கப்பட்டுள்ள பள்ளங்களில் இருந்து மை அச்சிடப்பட வேண்டிய பரப்பிற்கு மாற்றப்படுகின்றது. அடுத்து 'ஆ.்.ப் செட் அச்சிடல்' முறையானது அச்சிடப்படும் பகுதி, அச்சிடாப்பகுதி ஆகிய இரண்டும் உயரத்தில் மாறுபடாது. ஆனால் தத்தம் ஈரப்பதனில் மாறுபடுகின்றன.

காகிதத்தில் விம்பத்தை பதிப்பிக்கும் அல்லது உருவாக்கும் கலை வடிவமானது நகலாக்கம் செய்யப்படுவதற்கான புதிய பல்வேறு தொழில்நுட்பங்களை ஒரு கலைஞரின் நேரடியான கண்காணிப்பினூடே செய்யப்பட்டு வருகின்றது. காகிதமன்றி சிலசமயங்களில் துணி, மரப்பட்டை, பிளாஸ்டிக், கற்பாறை என பிற பொருட்களிலும் இது தயாரிக்கப்பட்டு வருகின்றது. சுற்றியுள்ள பகுதி வெட்டியெடுக்கப்பட்டு அதன் காரணமாக புடைத்துக் கொண்டிருக்கும் ஒரு விம்பத்தை கொடுக்கும் 'புடைப்பு அச்சு' அச்சுப் பரப்புக்குள் நேரடியாக வெட்டப்படும் 'செதுக்கு அச்சு' விம்பம் ஒன்றை கல் மீது வரையவோ தீட்டவோ பயன்படும் 'கல்லச்சுக்கலை' வடிவத்தாள் அல்லது தகடு ஒன்றில் வேண்டிய வடிவம் முன்னதாகவே வெட்டப்பட்டு அந்தத்தாளில் உள்ள துவாரங்கள் வழியாக மையையோ, வண்ணத்தையோ தெளிப்பதன் மூலம் தயாரிக்கப்படும் 'ஸ்டென்சில் அச்சு' முக்கிய தொழில்நுட்ப முறைகளின் வெவ்வேறு வடிவிலான அச்சுக்கலையாகும். புராதனக் கலைகளில் ஒன்றான அச்சுக்கலையில் பல முன்னோடிக் கலைஞர்கள் காணப்பட்டுள்ள போதிலும் 15ம் நூற்றாண்டைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த ஷோங்காவர் என்பவரே முதல் முக்கிய செதுக்குக் கலைஞர் என்று அறியப்படுகின்றார். 16ம் நூற்றாண்டில் அல்பிரட் டூரெர் என்பவர் தரமிக்க உன்னத அச்சுக்கள் பலவற்றை உருவாக்கினார் எனவும், 17ம் நூற்றாண்டில் ரெம்பிராண்ட் படைத்த செதுக் கோவியங்களையும் குறிப்பிடலாம்.

17ம் நூற்றாண்டில் ஊகியோ-யே பயிற்சிக்கூடத்தில் செய்யப்பட்ட மரச் செதுக்கல்களை ஜப்பானிய அச்சுக்கலையானது தொடக்கி வைத்தன. ஹோகுசாய் மற்றும் ஹிரோஷிகே பிரபலமான கலைஞர்களாகக் குறிப்பிடுவர். 18ம் நூற்றாண்டில் முக்கியமாக விளங்கிய மேற்கத்தேய நாட்டு அச்சுக்கலைஞர்களது பணிகளில் ஹோனோரிடோம்யா மற்றும் பிரஞ்சு பொதுமைத்துவக் கலைஞர்களின் படைப்புக்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றோடு முக்கிய பலகலையை சேர்ந்த கலைஞர்களும் அச்சுக்கலையில் ஆர்வம் காட்ட 20ம் நூற்றாண்டின் புதிய பாணிகள் மற்றும் புதிய உத்திகள் என்று வளர்ச்சிகள் பெருகின.

உலகிலேயே பழமையான அச்சிடப்பட்ட நூலாக 'சீனடயமண்ட் சூத்ரா' நூல் குறிப்பிடப்படுகின்றது. இது கிழக்கு ஆசியாவில் மிக செல்வாக்குள்ள மகாயான சூத்திரங்களில் ஒன்றாகும். இப்பொழுதும் அழியாமல் உள்ள ஆரம்பகால அச்சுப் புத்தகம் இதுவாகும்.

இப்புத்தகத்தை பதிப்பிக்க நிதியுதவி செய்தவர் வாங்சியே, அவர் பெற்றோர் நினைவாக இலவசமாக விநியோகிக்க இந்நூலை அவர் அச்சிட்டுள்ளார். சீனாவின் கான்சு மாகாணத்தின் டன் ஹீ வாற்குகையில் டைமண்ட் சூத்ராவின் சீன பதிப்பு ஒன்றின் நகலானது ஆரேல் ஸ்டீன் என்பவரால் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மஹாயனவிம்சிகா கையெழுத்துப்பிரதிகள் கண்டெடுக்கப்பட்டது. இது கி.பி 868 மே 11ம் தேதியில் அச்சிடப்பட்டது. இது கூட்டன் பர்க்கின் பைபிள் அச்சிடப்படுவதற்கு கிட்டத்தட்ட 586 ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்கிறது. இந்நூலின் ஒரு பிரதி பிரிட்டிஷ் நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றது. இந்நூலின் முகப்பில் அச்சிடப்பட்ட ஓவியம் தான் உலகிலேயே அச்சிடப்பட்ட முதல் ஓவிய அட்டைப்படமும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் குறித்து பிரித்தானிய நூலகம் 'The earliest complete survival of a dated printed book' உலகின் பழமையான முழுமை பெற்ற தேதியிடப்பட்ட அச்சு நூல் எனக்குறிப்பிடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடல் அல்லது அச்சுக்கோர்ப்பு என்பது பல்வேறு வகையான அச்சு செயல்முறைகளில் எழுத்துருக்களை அமைத்தல் 11ம் நூற்றாண்டில் அச்சுப் பயன்பாட்டிற்காக, மரத்தால் செய்யப்பட்ட எழுத்துருக்கள் சீனாவில் கண்டறியப்பட்டன. நகர்த்தி எடுக்கும் வகையிலான உலோக வார்ப்பிலான எழுத்துருக்கள் 13ம் நூற்றாண்டில் கொரியாவில் கண்டறியப்பட்டன. மீண்டும் டிவை ஐரோப்பாவில் ஜோனஸ் குட்டன் பெர்க் என்பவரால் கண்டறியப்பட்டன. அச்சுக்கோர்த்தல் மற்றும் அச்சடித்தல் பற்றிய வரலாற்றை நோக்கும் போது மேற்குறிப்பிட்ட குட்டன் பெர்க் என்பவர் தான் முதன் முதலில் எழுத்துருக்களைக் கோர்த்து வரிவடிவத்தில் தாளில் அச்சடிக்கும் முறையை உருவாக்கினார் என்பதை அறியலாம்.

1880 இல் வெப்ப உலோக செயல்முறைகள் கண்டறியப்பட்ட பின்னர் அச்சுக் கோர்ப்பில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. 1884 இல் டைனோடைப் என்பதில் விசைப்பலகையை பயன்படுத்தி எழுத்துருக்கள் ஒவ்வொரு வரியும் ஒற்றை உலோகவார்ப்பாக இருக்கும்படி உருவாக்கப்படுகின்றன. 1887இல் மோனோடைப் என்பதானது விசைப்பலகையைப் பயன்படுத்தினாலும் இதில் ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியாக அமைக்கப்படுகின்றது. ஒளி அச்சுக்கோர்ப்பு 20ம் நூற்றாண்டில் உருவானது. இதில் எழுத்துக்கள் நேரடியாக ஒளிச்சுருள் அல்லது ஒளி உணர் தாளில் உருவாக்கப்படுகின்றது. சுழலும் தட்டு அல்லது உருளை உள்ளது. இதில் எழுத்துக்களுக்கான இடங்கள் அதே அமைப்பில் வெட்டப்பட்டு இடைவெளிகளாக உள்ளன. இத் துவாரங்கள் வழியாக ஒளியைச் செலுத்தி, உட்புகுந்து வரும் ஒளியை உணர்தாளில் அல்லது சுருளில் விழுமாறு செய்து எழுத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

20ம் நூற்றாண்டின் இறுதியில் மென்மேலும் முன்னேறிய வளர்ச்சியினூடு பல அச்சிடல் தொழில்நுட்பங்கள் கணினி வழியூடு மேற்கொள்ளப்பட ஆரம்பிக்கப்பட்டது. கணினியையும் அதனோடு பொருத்தமான மென்பொருள்களையும் கையாண்டு வேண்டுமான வகையில் எழுத்துக்கள், குறியீடுகள் என்பவற்றை சேர்த்து பக்கங்களை வடிவமைத்து தேவைப்படும் கிரா∴பிக்ஸையும் கூட்டி மின்னணுக் கோப்பை உருவாக்கி இக் கோப்பினை லேசர் அச்சு மூலம் தாளுக்கோ படச்சுருளுக்கோ மாற்றம் செய்யப்பட்டு அச்சுப்பதிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகை மின்னணுக்கருவி ஒரு கணினியிலிருந்து உரைக் கோப்புக்களையோ, உருவப் படங்களையோ பெற்று காகிதத்திற்கோ அல்லது படச்சுருளுக்கோ மாற்றி அச்சிடும் கருவி ஒரு கணினியுடன் நேரடியாகவோ அன்றியும் இணையதளத்தின் வழி மறைமுகமாகவோ இது இணைக்கப்பட்டிருக்கலாம். தொடு அச்சுப் பொறிகள், தொடா அச்சுப் பொறிகள் என்று அச்சுப் பொறிகள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. பெரும்பாலான அச்சுப்பொறிகள் புள்ளி வரிசை அச்சுப் பொறிகள் ஆகும். இவை அச்சுப் பொறியின் தலைப்பகுதியில் இருக்கும் குறிப்பிட்ட ஊசி பாகங்களின் மூலம் வரிவடிவத்தை உருவாக்குகின்றன.

தொடா அச்சுப்பொறிகள் மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

01. லேசர் அச்சுப்பொறிகள்- லேசர் கற்றைகளைப் பயன்படுத்தி மின்சக்தி ஏற்றப்பட்ட மையை காகிதத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு கவர்ந்து அச்சிடுகின்றன.
02. மைதெறிப்பு அச்சுப்பொறிகள்- திரவ நிலைமையைத் தெளித்து அச்சிடுகின்றன.
03. வெப்ப அச்சுப்பொறிகள்- மெழுகை அடிப்படையாக கொணட மையை இடமாற்றம் செய்தோ, சூடாக்கப்பட்ட ஊசிகளைப் பயன்படுத்தியோ பதப்படுத்தப்பட்ட காகிதத்தின் மீது நேரடியாக அச்சிடப்படுகின்றன.

அச்சுக்கலையானது பல்வேறு காலங்களில் பல்வேறுபட்ட மாற்றத்தினூடும் வளர்ச்சிப் போக்கினூடும் இன்று பல பரிமாண அச்சிடல்களை மனங்கவர் விதமாக வாசிக்கத்தூண்டும் வகையில் வெளிக்கொணரப்பட்டுள்ளமையானது அச்சுக்கலையின் வளர்ச்சியையும் தேவைப்பாட்டையும் எமக்கு தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

செல்வி. மு.ரஞ்சிதமலர்
நூலகர்,
பொதுநூலகம்,
பிரதேச சபை, வெ.செட்டிக்குளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THURKKA
Multi Center
Digital Printers
Mallakam 021224-3053

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org